Registered as a news paper.

மாநகராட்சி மன்றம்

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 12 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷவ்வால் 03 (28.11.2003) வெள்ளிக்கிழமை இதழ் :59

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள்
இல்லங்களிலிருந்து உங்கள் உறவுகளுடன்
INTERNET
மூலமாக உறவாட,
உள்ளூர், வெளியூர்
துரித தொலைத் தொடர்புகட்கு
'திருமுருகன் கொம் நெற்'
இல. 46, ஆடியபாதம் வீதி,
(ப. நோ. கூ. ச. முன்பாக)
திருநெல்வேலி.
T.P.021-222-7310

### சிறப்பாக அமைக்கப்பட்ட மாவீரர் அரங்கில்

## பிரதான சுடரை ஏற்றிவைத்து தலைவர் பிரபாகரன் அஞ்சலி!


(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் உயிர்நீத்த மாவீரர்களை ஒருங்கே நினைவுகூரும் வகையில் நேற்றுமாலை 6.07 மணிக்கு நினைவுச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

வன்னிப் பகுதியில் பிரத்தியேகமாக- சிறப்பான முறையில் அமைக் கப்பட்ட பீடத்தில், தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் மாவீ ரர்களுக்கான பிரதான சுடரினை 6.07 மணிக்கு ஏற்றிவைத்தார். இதே நேரத்தில் மாவீரர் துயிலும் இல்லங்கள், நினைவு மண்டபங்கள், மற்றும் ஏனைய இடங்களிலும் பொதுச் சுடரை தளபதிகள், பொறுப்பாளர்கள், தமிழீழக் காவல்துறையினர் ஆகியோரால் நினைவுச் சுடர் ஏற்றப்பட்டது.

இதன்பின்னர் - மாவீரர்களின் கல்லறைகள் நினைவுக்கற்களின் முன் பாக இருந்த ஈகச்சுடரை மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் ஏற்றினர்.

யாழ்.குடாநாட்டிலுள்ள - கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில்- தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தென்ம ராட்சி கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் - தளபதி வீமன், வடம ராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல் (10 ஆம் பக்கம் பார்க்க)



பிரதான சுடரை ஏற்றிவைக்கும் தலைவர் பிரபாகரன்

# தனியரசாகப் பிரிந்து செல்வதற்குரிய புற நிலையை உருவாக்க வேண்டாம்!



## சிங்கள அரசியல் தலைமைக்கு பிரபாகரன் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

சிங்கள இனவாத ஆளும் வர்க்கம் தொடர்ந்தும் எமது மக்களின் உரிமை களை மறுத்து - சமரசத் தீர்வுகளை எதிர்த்து - ஒடுக்கு முறையைத் தொடருமானால், எமது மக்களுக்கு உரித்தான சுயநிர்ணய உரிமையின் கீழ் பிரிந்துசென்று - தனியரசைக் கட்டியெழுப்புவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. இப்படியான இறுதிமார்க்கத்திற்கு தமிழர்களை தள்ளிவிடும் புறநிலையை உருவாக்கிவிட வேண்டாமென, சிங்கள அரிசியல் தலைவர்க ளிடம், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

நேற்றுமாலை 5.40 மணியளவில் வே.பிரபாகரன் ஆற்றிய மாவீரர் தின உரையின் முழுவிபரம் வருமாறு,

எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய தமிழீழ மக்களே,
இன்று மாவீரர் நாள்.

வெளியின் பின்பு, மீண்டும் தமிழினத்தின் வீர எழுச்சிச் சின்னமாக, தமிழர் மண்ணிற் புலிக்கொடி பட்டொளி



# கொட்டும் மழைக்கு மத்தியில் மாவீரருக்கு மக்கள் அஞ்சலி!

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாள் நிகழ்வுகள் தமிழர் தாயகப் பிரதேசமான வடக்கு-கிழக்கு உட்பட தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் அனைத்து நாடுகளிலும் நேற்றைய தினம் உணர்வெழுச்சி யுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்றைய தினம் வடக்கு-கிழக் கின் தமிழர் தாயகப் பிரசேத்தில் இலட்சக்கணக்கான மக்கள் கொட் டும் மழைக்கும் மத்தியிலும் மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் சென்று தமது அஞ்சலிகளை செலுத்தினர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றுமாலை 5.40 மணியளவில் வே.பிரபாகரன் ஆற்றிய மாவீரர் தின உரையின் முழுவிபரம் வருமாறு,

**எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய தமிழீழ மக்களே,**

இன்று மாவீரர் நாள்.

இன்றைய நாள், வணக்கத்திற்குரிய புனித நாள். இன்று, தமிழீழ தேசம் சுதந்திர தாகம்கொண்டு எழுச்சி கொள்ளும் மகத்தான நாள். எமது மண்ணின் விடிவிற் காகவும் எமதுமக்களின் விடுதலைக்காகவும் தமது இன்னுயிரை ஈகஞ்செய்த எம்மினிய வீரர்களை எமது இதயக் கோவில்களில் நாம் நெஞ்சுருகிப் பூசிக்கும் திருநாள். அன்றைய தமிழர் இராச்சியம் வீழ்ச்சிய டைந்து, பல நூறு ஆண்டுகள் அந்நியருக்கும் அயலவ ருக்கும் அடிமைப்பட்டு வாழ்ந்த தமிழீழ தேசம் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது. இன்று எமது தாயகத்தின் பெரு நிலப்பரப்பில் எமது தன்னாட்சி நடைபெறுகிறது. ஒரு நீண்ட, துயரமான, கொடூரமான வரலாற்று இடை வெளியின் பின்பு, மீண்டும் தமிழினத்தின் வீர எழுச்சிச் சின்னமாக, தமிழர் மண்ணிற் புலிக்கொடி பட்டொளி வீசிப் பறக்கிறது. இந்த மாபெரும் வரலாற்றுத் திருப் பத்தை ஏற்படுத்தித் தந்தவர்கள் எமது மாவீரர்கள் என்பதை நான் பெருமிதத்துடன் இன்று கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

எமது தேசிய விடுதலைப் போராட்டம் என்றுமில்லா தவாறு இன்று உலகமயமாகியுள்ளது. பல தசாப்தங் களாகப் பாராமுகம் காட்டிவந்த உலகம் இன்று தனது முழுக் கவனத்தையும் எமது போராட்டத்தின் மீது திருப்பியுள்ளது.

ஒரு பலம்வாய்ந்த விடுதலைப் போராட்ட சக்தியாக இன்று உலகரங்கில் நாம் முன்னணி வகித்து நிற்கின் றோம்.

(2ஆம் பக்கம் பார்க்க)

### நாகர்கோவிலில் பயிற்சியின்போது

# படையினர் பலியானது தொடர்பாக இராணுவ விசாரணைக்கு உத்தரவு!

(கொழும்பு)

நாகர்கோவில் - எழுதுமட்டுவாள் கடல்நீரேரிப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை பயிற்சியின்போது - சேற்றில் மூழ்கி பத்து இராணுவத்தினர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக, விசேட இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டுப் படைகளின் கட்டளைத் தளபதியால் இந்த விசாரணைக்குழு நியமிக்கப்பட்டிருப்பதாக, இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை, பயிற்சியின்போது உயிரிழந்த பத்துப் படையினரும், கொமாண்டோக்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. முதலாவது விஜயபாகு காலாற்படை மற்றும் கெமுனு காலாற்படை ஆகியவற்றைச் சேர்ந்த - கிளாலி முன்னரங்க நிலைகளில் பணியாற்றிய படையினரே உயிரிழந்தவர்கள் எனத் தெரியவருகிறது.


நேற்றுக்காலை விமானப்படை விமானம் மூலமாக கொழும்புக்குக் கொண்டுசெல்லப்பட்ட உயிரிழந்த பத்துப் படையினரதும் சடலங்கள் நாரஹென்பிட்டி பொலிஸ் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனைகள் நடத்தப்பட்டன. அத்துடன், நீதிமன்ற விசாரணைகளும் நடத்தப்பட்டன.

உயிரிழந்த பத்துப் படையினரதும் உடல்களை அவர்களின் (10 ஆம் பக்கம் பார்க்க)



மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு அஞ்சலி செலுத்தும் தலைவர் பிரபாகரன்.

# தனியரசாகப் பிரிந்து ...



## மாவீரர்களின் சுதந்திரதாகம் சாவுடன் தணியவில்லை

தர்மத்தின் வழிதவறி, ஒரு சத்திய இலட்சியத்திற்காகச் செய்யப்படும் தியாகங்கள் என்றுமே வீண்போவதில்லை. எமது தேசத்தின் விடுதலைக்கு நாம் கொடுத்த விலை ஒப்பற்றது. உலக விடுதலை வரலாற்றில் நிகரற்றது. இந்த அளப்பரிய ஈகத்தின் ஆன்மீக சக்தி இன்று உலகத்தின் மனச்சாட்சியை உலுப்பிவிட்டிருக்கிறது. எமது மாவீரர்களின் சுதந்திர தாகம் சாவுடன் தணிந்து போகவில்லை. அது எமது இனத்தின் வீர விடுதலைக் குரலாக உலகெங்கும் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

சாதி, மதம், வர்க்கம் என்ற வேறுபாடுகளுக்கப்பால், ஒரு விடுதலை இயக்கத்தின் கீழ், ஒரு விடுதலை இலட்சியத்தின் கீழ், ஒன்றுபட்ட சமூகமாக எமது மக்கள் இன்று அணிதிரண்டு நிற்கிறார்கள். வீரம் செறிந்த எமது விடுதலைப் போராட்டமும் அந்த விடுதலைப் போராட்டத்தில் எமது போராளிகள் ஈட்டிய அபாரமான சாதனைகளும் அவர்கள் புரிந்த அற்புதமான தியாகங்களுமே எமது மக்களை எழுச்சியூட்டி, உணர்வூட்டி ஒரே அணியில், ஒரே இனமாக, ஒரே தேசமாக ஒன்று திரள வைத்திருக்கின்றன. எமது மாவீரர்களின் மகத்தான தியாகங்களும் அர்ப்பணிப்புகளுமே எமது தேசத்தின் ஒருமைப்பாட்டிற்கு ஆதார சக்தியாக விளங்குகின்றன.

எனது அன்பான மக்களே!

சிங்கள தேசத்தில் இன்று அரசாங்கம் என்று கருதக்கூடிய ஓர் ஒழுங்கமைவான கட்டமைப்பு இயங்கவில்லை. அரச அதிகாரமானது, இரு பெரும் சிங்களக் கட்சிகளின் தலைமைகள் மத்தியிற் பிளவுபட்டுக் கிடக்கிறது. நாடாளுமன்ற ஆட்சியும் ஜனாதிபதி ஆட்சியும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு மோதும் நிலையில் உள்ளன. பாதுகாப்பு, உள்துறை, ஊடக அமைச்சுகளை சந்திரிகா அம்மையார் திடீரெனப் பறித்துக்கொண்டதால் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிபீடம் அதிகார வலுவிழந்து முடங்கிக்கிடக்கிறது.

இரு தலைவர்களுக்கும் மத்தியிலான இந்த அதிகார இழுபறியால் அரச கட்டமைப்பு ஆட்டம் கண்டு உறுதிநிலை குலைந்துள்ளது. இந்த நெருக்கடி காரணமாகச் சமாதான முன்னெடுப்புகள் செயலிழந்து போயின. இந்தக் குழப்ப நிலையால் விரக்தியடைந்த நோர்வே அரசு தனது சமாதான முயற்சிகளை இடைநிறுத்தியுள்ளது.

## அமைதிச் சூழலுக்கு ஆபத்து

தென்னிலங்கையில் திடீரென உருவாகியுள்ள இத்தகைய நிலைமைகள் காரணமாக அமைதிச் சூழ்நிலைக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. சமாதான வழியிலான பேச்சுக்கும் சமரசத் தீர்வுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடி நிலைமை தமிழ் பேசும் மக்களுக்கு மட்டுமன்றி சமாதானத்தை விரும்பும் சர்வதேச நாடுகளுக்கும் கவலையையும் ஏமாற்றத்தையும் கொடுத்திருக்கிறது.

கொழும்பில், திடீரென இந்த அரசியல் பூகம்பம் ஏற்பட்டதன் காரணமென்ன? ஏற்கனவே இரு துருவங்களாக முரண்பட்டிருந்த அரச அதிகார மையத்தில் திடீரென விரிசல் விழுந்ததன் காரணமென்ன? போர் ஓய்வைப் பேணி அமைதியைக் காப்பதற்கு அத்தியாவசியமான பாதுகாப்பு, உள்துறை அமைச்சுகளைச் சந்திரிகா அம்மையார் திடீரெனப் பறித்துக்கொண்ட புறநிலைக் காரணி என்ன?

## தனது தலையீட்டுக்கு சந்திரிகா கூறும் காரணம்

தனது தலையீட்டுக்கு இரண்டு காரணங்களை முன்வைக்கிறார் சந்திரிகா. ஒன்று, விடுதலைப் புலிகள் இயக்கம் தனது இராணுவக் கட்டமைப்பைப் பலப்படுத்திப் போருக்கான ஆயத்தங்களைச் செய்துவருவதால், இலங்கையின் பாதுகாப்புக்கும் இறைமைக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்பது.

அடுத்தது, ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் புலிகள் இயக்கத்திற்குப் பெரிய அளவிற் சலுகைகளை வழங்கிவருகிறது என்பதாகும். இந்த இரண்டு குற்றச்சாட்டுகளிலும் எவ்வித உண்மையுமில்லை என்பதை நான் இங்கு திட்டவட்டமாக எடுத்துரைக்க விரும்புகின்றேன். எமது விடுதலை இயக்கத்தைக் களங்கப்படுத்தும் குறிக்கோளுடனும், தற்போதைய சமாதானச் சூழ்நிலையைக் குழப்பியடிக்கும் நோக்கத்தோடும் கட்டவிழ்த்துவிடப்பட்ட புரளிகள் இவை.

## சமாதானத்தையே விரும்புகின்றோம்

எமது இயக்கமும் சரி, மக்களும் சரி போரை விரும்பவில்லை. வன்முறைப் பாதையை விரும்பவில்லை. நாம் சமாதானத்தையே விரும்புகின்றோம். சமாதான வழியிலே எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படுவதையே விரும்புகின்றோம். சமாதான வழிமுறையில் நாம் ஆழமான நம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்டிருக்கிறோம். இதன் காரணமாகவே அமைதிநிலைக்கு எவ்வித பங்கமும் ஏற்படாத வண்ணம் போர்நிறுத்தத்தை நாம் இறுக்கமாகவும் உறுதியாகவும் பேணிவருகின்றோம். இப் போர்நிறுத்தத்தை எமது இயக்கமே முதலில் ஒருதலைப்பட்சமாக அறிவித்தது. அத்துடன் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆயுதப் படைகளின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை யும் பொறுமையுடன் சகித்துக்கொண்டு நாம் அமைதிகாத்து வருகின்றோம்.

நாம் பெருந்தொகையில் ஆட்சேர்ப்பு நிகழ்த்தி, ஆயுதங்களைத் தருவித்து, படையணிகளைப் பலப்படுத்தி, போருக்கான ஆயத்தங்களைச் செய்து வருகின்றோமென சந்திரிகா அம்மையார் குற்றம் சுமத்துவது அபாண்டமான பொய்யாகும்.

அமைதிகாக்கும் பணியில் நாம் முழுமையாக ஈடுபட்டிருக்கிறோமே தவிர போருக்கான ஆயத்தங்கள் எதையும் செய்யவில்லை. எமது நிர்வாகக் கட்டமைப்புகளுக்கு ஆட்பலம் தேவை என்பதால் சிறிய அளவில் ஆட்சேர்ப்புச் செய்துவருகின்றோம் என்பது உண்மை. இதனைத் திரிபுபடுத்தி, பெரிதுபடுத்திப் போருக்கான முன் முயற்சியெனச் சிங்கள மக்களுக்குப் பூச்சாண்டி காட்டுகிறார் சந்திரிகா.

## போர் நிறுத்தத்தால் அமைதி ஏற்படவில்லை

இப் போர்நிறுத்தத்தால் தமிழர் தாயகத்தில் முழுமையான அமைதி நிலை ஏற்படவில்லை. இயல்பு நிலையும் திரும்பவில்லை. அந்நிய இராணுவ ஆக்கிரமிப்புக்கு ஆளான அவல வாழ்க்கையே தொடர்கிறது. சிங்கள இராணுவம் போர்நிறுத்த விதிகளையும் கடப்பாடுகளையும் நிறைவுசெய்ய மறுத்து வருகிறது.

உயர் பாதுகாப்பு வலையங்கள் என்ற போர்வையிற் கணிசமான குடியிருப்பு நிலங்களில் இராணுவ ஆக்கிரமிப்புத் தொடர்வதால், இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது சொந்தக் கிராமங்களுக்கும் வாழ்விடங்களுக்கும் திரும்பமுடியாது அவலப்பட்டு வருகின்றனர். இது ஒருபுறமிருக்க, ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அடாவடித்தனங்கள் அடிக்கடி தலைதூக்கி வருகின்றன.

இதனால் தமிழ்ப் பொதுமக்கள் சதா துன்பத்திற்கும் இம்சைக்கும் ஆளாகிவருகின்றனர். போருக்கு ஓய்வுஏற்பட்டபோதும் எமது மக்களுக்கு இன்னும் ஓய்வுகிட்டவில்லை. முழுமையான அமைதியையும் இயல்பான வாழ்வையும் எமது மக்கள் இன்னும் அனுபவிக்க முடியவில்லை.

அதேவேளை, போர் நிறுத்தத்தாற் சிங்கள தேசத்தில் முழுமையான அமைதியும் இயல்பு நிலையும் நிலவுகிறது. பொருளாதார வாழ்வும் மேம்பட்டு வருகிறது. போர் நிறுத்தத்தின் ஆக்கபூர்வமான பயன்களைச் சிங்கள தேசமே அனுபவித்து வருகிறது. ஆனால் தமிழர்களின் அவலநிலை தொடர்கிறது. இதுதான் இன்றைய யதார்த்த மெய்நிலை.

## போர்நிறுத்த காலத்தில் இழப்புக்களையே சந்தித்தோம்

இரண்டு ஆண்டுகளாக நீடிக்கும் போர் நிறுத்த காலத்தில், சந்திரிகா அம்மையார் குற்றம் சுமத்துவது போல, எமது இயக்கத்திற்குப் பெரும் சலுகைகள் வாரி வழங்கப்படவில்லை. மாறாக, இழப்புக்களையே நாம் சந்தித்திருக்கிறோம்.

போர்நிறுத்த காலத்தில் எமது இயக்கத்திற்குச் சொந்தமான இருபெரும் வணிகக் கப்பல்கள் சர்வதேசக் கடற்பரப்பில் கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்டன. எமது மீன்பிடிப் படகுகளும் நாசமாக்கப்பட்டிருக்கின்றன.

இச் சம்பவங்களின் விளைவாக, மூத்த உறுப்பினர்கள் பலர் உட்பட கடற்புலிப் போராளிகள் இருபத்தாறு பேரை நாம் இழந்தோம். பொறுமையின் எல்லைக்கு எம்மைத் தள்ளிய இந்த ஆத்திரமூட்டும் சம்பவங்களையும் சகித்துக்கொண்டு நாம் அமைதியைப் பேணிவந்தோமென்றால் அது சமாதானத்தில் எமக்குள்ள உறுதியையே எடுத்துக்காட்டுகிறது.

எமது விடுதலை இயக்கத்திற்கும் ரணில் விக்கிரமசிங்காவின் அரசுக்கும் மத்தியிற் சென்ற ஆண்டு செப்டெம்பர் மாதத்தில், தாய்லாந்தில் ஆரம்பித்த பேச்சுக்களில் உருப்படியான, ஆக்கபூர்வமான முன்னேற்றம் எதுவும் காணப்படவில்லை.

## ஆறு சுற்றுப் பேச்சுக்கள்

ஆறு மாத காலத்திற்குள் நிகழ்ந்த ஆறு சுற்றுப் பேச்சுக்களின்போது எடுக்கப்பட்ட தீர்மானங்களும் முடிவுகளும் நிறைவேற்றப்படவில்லை. போர் நெருக்கடியைத் தணித்து, இயல்புநிலையைக் கொண்டுவருவதற்கும் இடம்பெயர்ந்த மக்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கும் நிறுவப்பட்ட உப - குழுக்கள் செயலிழந்து போயின.

அரசுடன் பேசி எமது மக்கள் எதிர்கொண்டு நின்ற பூதாகரமான வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நாம் எடுத்த முயற்சிகள் பயனற்றுப்போயின.

இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட தமிழர் தாயகத்தில் இயல்பு நிலையைத் தோற்றுவிப்பது, இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவது, போரால் அழிவுற்ற கட்டுமானங்களை மீளமைப்பது, அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பது போன்ற எமது மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளை உதாசீனம் செய்துவிட்டு, அரச தரப்பும் அனுசரணையாளர்களும் மனித விழுமியங்கள் பற்றியும் இறுதித் தீர்வுக்கான வழிமுறைகள், வரைபடங்கள் பற்றியுமே முக்கிய கவனம்செலுத்தினர்.

இதனால் பேச்சுவார்த்தை, மக்களது பிரச்சினைகளுக்கும் அபிலாசைகளுக்கும் அப்பால் வேறுதிசையில் நகர்ந்தது.

## பேச்சுக்களைப் பயன்படுத்தி பலப்படுத்திய அரசு

இது இவ்வாறிருக்க, சமாதானப் பேச்சுக்களை ஒரு கவர்ச்சிப் பொருளாகக் காட்டி, உலகநாடுகளிலிருந்து உதவியையும் கடனையும் பெற்று, போரினால் வீழ்ச்சி கண்ட பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதிலேயே ரணிலின் அரசு அதீத அக்கறை காட்டியது. அத்துடன் உலக நாடுகள் சிலவற்றின் உதவியுடன் ஒரு சர்வதேசப் பாதுகாப்பு வலையத்தை நிறுவிவிடவும் அரசாங்கம் திட்டமிட்டுச் செயற்பட்டது.

ரணில் அரசின் இத்தந்திரோபாயம் காரணமாகச் சமாதான முயற்சியிலும் பேச்சுக்களிலும் உலக நாடுகள் பலவற்றின் அக்கறையும் தலையீடும் அதிகரித்தன. தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு எத்தகைய வரையறைக்குள் தீர்வுகாணப்படவேண்டும் என்பதையும் சில நாடுகள் வலியுறுத்திக் கூறின. இவ்விதம் சர்வதேசத் தலையீடுகள் அதிகரித்ததன் எதிர்மறை விளைவாகச் சமாதானப் பேச்சு மேலும் சிக்கலடைந்தது.

இந்தச் சூழ்நிலையிற் சென்ற ஆண்டு ஏப்ரல் மாத நடுப்பகுதியில் எமது இயக்கத்தை ஓரம் கட்டிவிட்டு, இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் முக்கிய மாநாடு ஒன்று வோஷிங்ரனில் கூட்டப்பட்டது. பேச்சுவார்த்தையில் முக்கிய தரப்பாகவும் சமபங்காளி என்ற தகைமையுடனும் பங்குபற்றிவந்த எமது இயக்கம் இவ்விதம் சிறுமைப்படுத்தப்பட்டமை எமக்கு ஏமாற்றத்தையும் கவலையையும் தந்தது.

## பிரச்சினைகளுக்கு குறுகியகாலத்தில் நிரந்தரத்தீர்வு சாத்தியமில்லை

இப்படியான நிலைமைகள் காரணமாகவே பேச்சுக்களைத் தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்துச் சமாதான வழிமுறையின் பல்வேறு பரிமாணங்களையும் மறுபரிசீலனை செய்ய நாம் தீர்மானித்தோம். தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வுகாண்பது என்பது உடனடியாக, குறுகிய காலத்திற் சாத்தியப்படப் போவதில்லை. அது நீண்ட காலம் பிடிக்கும். ஆனால், எமது மக்கள் எதிர்கொள்ளும் வாழ்க்கைப் பிரச்சினைகள் அவசரமானவை.

நீண்ட காலத்திற்குப் பின்போட முடியாதவை. அத்தியாவசியமான மனிதாபிமானத் தேவைகள் ஒருபுறம் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் போன்ற பிரச்சினைகள் மறுபுறமாக எமது மக்கள் எதிர்கொள்ளும் சிக்கலான, பாரிய இடர்களுக்கு உடனடியாகப் பரிகாரம் தேவை. இதுபற்றி ஆழமாகப் பரிசீலனை செய்து பார்த்தபொழுது தான் வடகிழக்கில் ஓர் இடைக்கால அதிகாரசபை நிறுவப்படுவது அவசியமென உணர்ந்தோம்.

## இடைக்கால நிர்வாகசபை அவசியம்

போரினாற் பேரழிவுகளுக்கு இலக்காகி, ஆயுதப் படைகளின் ஆக்கிரமிப்புக்கும் அச்சுறுத்தலுக்கும் ஆளாகிநிற்கும் தமிழர் தாயகத்தில் இயல்புநிலையை தோற்றுவிக்கவும் இடம்பெயர்ந்தோரைக் குடியேற்றவும் புனர்நிர்மாண அபிவிருத்தி வேலைகளைச் செம்மையாகவும் துரிதமாகவும் நிறைவேற்றக்கூடிய செயற்றிறன்மிக்கதாக இந்த இடைக்கால ஆட்சியதிகார சபை அமையவேண்டுமெனக் கருதினோம். இதன் அடிப்படையில் கணிசமான அதிகாரங்களைக் கொண்டதான ஓர் இடைக்கால அரசியல் நிர்வாக ஆட்சியமைப்பு உருவாக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி, அதற்கான ஒரு திட்ட வரைவை முன்வைக்குமாறு நாம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தோம். ஓர் உருப்படியான திட்டத்தை அரசாங்கம் முன்வைத்தால் அதனை அடிப்படையாகக்கொண்டு பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்கு நாம் தயாராக இருப்பதாகவும் அறிவித்தோம்.

கடந்த மே மாதம் 15 ஆம் திகதி நோர்வே வெளிவிவகார அமைச்சர் திரு.பீட்டர்சன் அவர்களை நான் சந்தித்தபோதும் உருப்படியான அதிகாரங்களைக் கொண்ட ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தினேன்.

இருபது ஆண்டு காலமாக நீடித்த போரினால் அழிந்துபோன எமது தேசத்தையும் எமது மக்களின் சிதைந்துபோன வாழ்க்கையையும் மீளக் கட்டியமைப்பதற்கு இத்தகையதொரு ஆட்சியமைப்புத் தேவையென்பதையும் விளக்கினேன்.

## அரசு அனுப்பிய திட்டவரைபுகள்

எமது கோரிக்கைக்கு இணங்க, இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக, ஒன்றன்பின் ஒன்றாக, இரு திட்ட வரைவுகளை அரசாங்கம் எமக்கு அனுப்பிவைத்தது. இத்திட்ட வரைவுகளில் குறிப்பிடப்பட்ட நிர்வாகசபை, நாம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க உருப்படியான அதிகாரங்களைக் கொண்டதாக அமையவில்லை.

அத்துடன் எமது இயக்கத்தின் பங்கும் தெளிவானதாக வரையறுக்கப்படவில்லை. மிகவும் குறுகிய அதிகாரங்களுடன் அபிவிருத்தி வேலைகளை மட்டும் கையாளும் ஒரு நிர்வாக அமைப்பையே இவ்வரைவுகள் பரிந்துரைத்தன. இதனால் இத்திட்ட வரைவுகளை ஏற்கமுடியாதென நாம் நிராகரித்தோம்.

இதனையடுத்து, இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாகப் புதிய யோசனைகள் அடங்கிய மூன்றாவது வரைவு ஒன்றை அரசாங்கம் எமது பரிசீலனைக்கு அனுப்பிவைத்தது. இத்திட்டம் எமக்குத் திருப்தி அளிக்காதபோதும் நாம் அதனை நிராகரித்துவிடவில்லை.

எமது இயக்கம் எதிர்பார்த்தது போலவும் எமது மக்களின் அபிலாசைகளை நிறைவுசெய்யும் வகையிலும் ஒரு திட்டவட்டமான இடைக்கால ஆட்சியமைப்பை முன்வைக்க அரசாங்கம் தயங்குகின்றது என்பது எமக்குத் தெளிவாகியது. ஆயினும், ரணிலின் ஆட்சிபீடம் ஏதோ புதியபுதிய யோசனைகளை முன்வைக்க விடுதலைப் புலிகள் இயக்கம் அவற்றைத் தொடர்ச்சியாக நிராகரித்து வருவது போன்ற ஒரு தப்பபிப்பிராயம் எழக்கூடுமென நினைத்தோம்.

## மாற்றுத்திட்டத்தை முன்வைக்க தீர்மானித்தோம்

ஆகவேதான், அரசாங்கத்தின் இறுதி வரைவை எடுத்த எடுப்பில் நிராகரிக்காமல், அதற்குமாற்றுத் திட்டமாக எமது யோசனைகள் அடங்கிய ஒரு திண்ணியமான, உருப்படியான இடைக்கால ஆட்சியதிகாரக் கட்டமைப்பை வரைந்து அதனை அரசாங்கத்திடம் கையளிக்க நாம் முடிவெடுத்தோம்.

எமது திட்டவரைவைத் தயாரிக்கும் விடயத்தில் நாம் அவசரப்படவில்லை. கால அவகாசம் ஏற்பட்டாலும் நாம் முதன்முதலாக எழுத்தில் வரைந்துகொடுக்கும் திட்டம், ஒரு இடைக்கால ஒழுங்காக அமைந்தபோதும் அது செம்மையானதாக, புதுமையானதாக, நடைமுறைச் சாத்தியமானதாக இருக்கவேண்டுமென விரும்பினோம்.

அத்தோடு, பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட எமது மக்களின் சிக்கலான வாழ்க்கைப்பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தேடிக் கொடுக்கும் வழிமுறைகளைக்கொண்டதாகவும் அது அமையவேண்டும் எனவும் எண்ணினோம்.

ஆகவேதான், எமது திட்ட வரைவைப் பரந்த அளவில், பல்வேறு மட்டங்களில் பல்வேறு தரப்பினரதும் ஆலோசனையைப் பெற்றுத் தயாரித்தோம். பரந்துபட்ட ரீதியில் தமிழீழ மக்களையும் வெளிநாடுகளில் வதியும் எமது சட்ட, யாப்பு அறிஞர்களையும் சர்வதேச நிபுணர்களையும் கலந்தாலோசித்தே இத் திட்டவரைபு உருவாக்கப்பட்டது.

அரசாங்கத்திடம் நாம் சமர்ப்பித்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டம்பற்றி நான் இங்கு விபரமாக விளக்கிக் கூறுவது அவசியமில்லை. இத்திட்ட வரைவு ஏற்கனவே ஊடகங்கள் வாயிலாக எல்லோரதும் பார்வைக்கும் ஆய்வுக்குமாக வெளியிடப்பட்டுள்ளது.

எமது திட்ட யோசனைகள் பல ரகமான சர்ச்சையையும் குழப்பத்தையும் கிளப்பிய போதும் சமாதானத் தீர்வைநோக்கி நாம் எடுதத முயற்சியை உலக நாடுகள் பல வரவேற்றுள்ளன. எமது யோசனைகளை விபரமாகவும் தெளிவாகவும் முதற்தடவையாக எழுத்தில் முன்வைத்ததையும் சில வெளிநாடுகள் வரவேற்றுள்ளன. ரணிலின் அரசு எமது திட்ட வரைவை நிராகரிக்காது, அதன் அடிப்படையில் பேசுவதற்கு இணக்கம் தெரிவித்தது.

## இனவாத சக்திகளிடம் இருந்து கிளம்பும் எதிர்ப்பு

அதேவேளை, எமது இடைக்கால நிர்வாக யோசனைகளுக்குச் சிங்கள இனவாத சக்தி

(9 ஆம் பக்கம் பார்க்க)

# எமது பலத்தைக்கண்டுதான் அரசு எம்முடன் பேச முன்வருகின்றது

## கடற்புலிகளின் விசேடதளபதி சூசை



(ஆழியவளை)

தற்போது நடைபெற்று வரும் மாவீரர் நாள் செயற பாடுகளைக் குழப்பவேண்டாம் என ஜனாதிபதி சந்திரிகா - இராணுவத்தினருக்குக் கட்டளை பிறப்பித்துள்ளதாக ஊடகங்கள் மூலமாக அறியமுடிகின்றது.

சந்திரிகா பொறுப்பில் பாதுகாப்பு அமைச்சு இருந்த காலத்திலேயே, எமது மாவீரர்களின் கல்லறைகள் புல்டோசர்கள்மூலம் தகர்க்கப்பட்டன. இப்போதும் யாழ். குடாநாட்டில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் - சிவப்பு, மஞ்சள் கொடிகள் படையினரால் அறுக்கப்படுகின்றன எனக் கடற்புலிகளின் விசேட தளபதி கேணல் சூசை தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை, உடுத்துறை மகாவித்தியாலத்தில் நடைபெற்ற மாவீரர்தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவர் தொடர்ந்து பேசுகையில் - கடந்த பொதுத் தேர்தலில் நான் ஆட்சிக்கு வந்தால், விடுதலைப் புலிகளிடன் இடைக்கால நிர்வாகத்தைக் கொடுத்து, பேச்சுவார்த்தைமூலம் பிரச்சினையைத் தீர்ப்பேன் என்று கூறிய ரணில், இன்று தன்னால் பேசமுடியாது என்று கூறிவிட்டார். யுத்தம் நடைபெற்ற காலத்தில் ஒதுக்கப்பட்ட அளவு நிதியான 5200 கோடி ரூபாவே, சமாதான காலத்திலும் பாதுகாப்புச் செலவுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. போர் நடைபெற்ற காலத்திலேயே கொழும்புக்குச் சென்றுவந்த வெளிநாட்டு யுத்தக் கப்பல்கள், சமாதான காலத்திலும் வந்துசெல்கின்றன.

யுத்தத்தை முன்னெடுக்கக்கூடிய நிலையில் தென்னிலங்கை இல்லை, தீர்வு காணும் நிலையிலும் அரசு இல்லை, 1987 ஆம் ஆண்டில் இலங்கை - இந்தியா ஒப்பந்தம் ஏற்பட்ட சமாதமான காலத்தில், கடலிலே இரண்டு தளபதிகள் உட்பட, 12 வேங்கைகளை இழந்தோம். இந்திய அமைதிப்படையுடன் நீங்கள் தந்த ஆதரவுடன் போரிட்டு, வெற்றிகண்டோம். இன்று இரண்டு வருட சமாதான காலத்திலே, கடலிலே தளபதிகள் உட்பட 26 போராளிகளை இழந்தோம். சமாதானம் ஏற்பட்டு, மக்கள் நிம்மதியாக வாழவேண்டும் என்பதற்காகப் பொறுமை காத்துள்ளோம். அத்துடன், இன்று மூன்றாம் தரப்பு நோர்வே மத்தியஸ்தத்துடனும், கண்காணிப்புக்குழு மேற்பார்வையுடன் சமாதானம் நடைபெறுகின்றது.

இன்றைய நாட்கள் மிகவும் நெருக்கடியானவை. எமது பலத்தைக் கண்டுதான், அரசு எம்முடன் பேச முன்வருகின்றது. நாம் பலம் இழப்போமானால், அரசு யுத்தத்தைத் தொடர எத்தனிக்கும்.

தீச்சுவாலை சமர், கட்டுநாயக்கா தகர்ப்பின் பின்னர், அரசு எம்முடன் பேசமுற்பட்டது. தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கவேண்டுமாயின், தமிழீழ விடுதலைப் புலிகள் என்றும் பலமாக இருக்கவேண்டும். காலத்தால் அழியாத காவியநாயகர்கள் இந்த மாவீரர்கள், எமது தலைவரின் தீர்க்கதரிசனத்தினாலும், மதிநுட்பத்தினாலும் எமது விடுதலைப் போராட்டம் - வெற்றிப்பாதையில் செல்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.(122)





திருமலை மாவட்டத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற மாவீரர்தின நிகழ்வில் தேசியக்கொடியை திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன் ஏற்றுவதையும், அங்கு வடிவமைக்கப்பட்ட அலங்கார வளைவையும் படத்தில் காணலாம்.

# முஸ்லிம்கள் மீதான தாக்குதல் நிறுத்தப்படாவிடின் சமாதானப் பேச்சுக்கள் கானல்நீராகிவிடும்

## எச்சரிக்கிறார் தௌபிக் எம்.பி.

(கொழும்பு)

திருகோணமலையில் முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்டுவரும் கைக்குண்டுத்தாக்குதலை - புலிகள் தலையிட்டுத் தடுக்காவிட்டால், சமாதானப் பேச்சுக்கள் கானல்நீராகிவிடும்.

இவ்வாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.எம்.தௌபிக் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக முஸ்லிம் மக்கள் மீது கைக்குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றுவருவது தொடர்பாகக் கருத்து வெளியிட்டபோதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் இவ்விடயம் குறித்துத் தெரிவித்ததாவது -

திருமலை மாவட்டத்தில் கடந்த திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் நடத்தப்பட்டுள்ள கைக்குண்டுத் தாக்குதல்களில், மூவர் உயிரிழந்ததுடன், எட்டுப்பேர் காயமடைந்துமுள்ளார்கள்.

இவ்வாறு முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் தொடர்வதால், அவர்கள் மிகுந்த அச்சத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளே இந்த விடயத்தில் தலையிட்டு, முஸலிம் மக்களுக்கு உறுதியான பாதுகாப்பை வழங்கவேண்டும். ஏனெனில், அவர்களே வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களை கட்டுப்படுத்தும் சகல அதிகாரங்களையும் பெற்றுள்ளார்கள்.

இத்தகைய தாக்குதல்களை நடத்துவோரை அடையாளம் கண்டு, அவர்களுக்குரிய தண்டனைகளை வழங்கவேண்டும். இல்லையேல் சமாதான முயற்சிகள் கானல் நீராகிப்போய்விடும்.

புலிகள் சரியான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

# முன்னாள் உள்துறை அமைச்சருக்கு வேறொரு அமைச்சுப் பொறுப்பு

## ஜனாதிபதி சிபாரிசு

போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சை இரண்டாகப்பிரித்து, விமானப் போக்குவரத்து அமைச்சை முன்னாள் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவிற்கு வழங்குமாறு பிரதமருக்கு - ஜனாதிபதி ஆலோசனை கூறியுள்ளார்.

அதேபோன்று முன்னாள் ஊடக அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காருக்கு, வேறொரு அமைச்சுப் பொறுப்பை வழங்குமாறும் ஜனாதிபதி - பிரதமரை கேட்டுள்ளார்.

பாதுகாப்பு துறை, உள்துறை மற்றும் ஊடக அமைச்சுக்களின் பொறுப்புக்களை, ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளநிலையில், பிரதமருக்கு இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக, ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, விடுதலைப் புலிகள் இயக்கத்தை விமர்சனம் செய்ய வேண்டாமென, அரச ஊடகங்களுக்கு ஜனாதிபதி ஆலோசனைகளை வழங்கியதாக வெளிவந்திருக்கும் செய்தியை, ஜனாதிபதி செயலகம் முற்றாக நிராகரித்திருக்கின்றது.

### க.பொ.த. சாதாரணதர பரீட்சை அட்டைகள் கிடைக்கவில்லை.

(கொழும்பு)

இரண்டு வாரங்களுக்கு முன்னரே பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை அதிபர்கள் - பரீட்சார்த்திகளுக்கு இன்னமும் விநியோகிக்காதுள்ளதாக், தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதென பரீட்சை ஆணையாளர் டபிள்யூ. ஜே.எம். விஜேசிறி தெரிவித்தார்.

# அரசின் வரவு -செலவுத் திட்டத்தின்மூலம் மக்களுக்கு சலுகைகள் வழங்கவேண்டும்

சுதந்திர தொழிற்சங்க உறுப்பினர்கள் குழு - அரசின் வரவு - செலவுத்திட்டத்தினால் மக்களுக்கு எந்தவித விமோசனமும் இல்லாத காரணத்தால், அவர்களுக்கான சலுகைகளை வழங்குமாறு கோரவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைமை அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில், அதன் செயலாளரான லெஸல தேவேந்திரா தெரிவிக்கையில் - அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டம் மூலம், குறைந்தளவிலான முதலீட்டாளர்களே இலாபமடைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த வரவு-செலவுத் திட்டம்மூலம், ஓய்வூதியக்காரர்கள் மட்டுமே கவனத்திலெடுக்கப்பட்டுள்ளதாகப் பொதுச்சேவைகள் ஆணைக் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

# ஆசிய பசுபிக் குழுவினர் பிரதமரைச் சந்தித்தனர்

(கொழும்பு)

கொழும்பு சென்றுள்ள ஆசிய பசுபிக் நண்பர்கள் கூட்டமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர்.

முழுமையாகப் பெண்களைக் கொண்ட இக்குழுவில், உலக நாடுகள் பலவற்றின் பிரதமர்கள், தூதுவர்கள் மற்றும் முக்கிய இராஜதந்திரிகளின் மனைவிமார் அடங்கியிருந்தனர்.

இவர்களுள், ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாசியின் மனைவியும் அடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரதமருடனான இந்தச் சந்திப்பின்போது, ஆசிய பசுபிக் நண்பர்கள் அமைப்பின் செயற்பாடுகளை, இலங்கையில் எவ்வாறு விருத்தி செய்யலாம் என்பது பற்றி ஆராயப்பட்டது.

பேச்சுக்களின் முடிவில் இவர்களது இலங்கை விஜயத்துக்குப் பிரதமர் நன்றி தெரிவித்தாகவும், பிரதமர் அலுவலகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# புலிகள் யுத்தநிறுத்த மீறலில் ஈடுபடுவதாக படைத்தரப்பு குற்றம் சாட்டியுள்ளது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் போர் நிறுத்த மீறலில் ஈடுபட்டு வருவதாக, பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் குற்றஞ்சாட்டியுள்ளது. அத்துடன், ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளிலும் விடுதலைப் புலிகள் ஈடுபட்டு வருவதாக, அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தமிழீழ வரைபடங்கள், பதாதைகள் என்பவற்றைப் பொது இடங்களில் வைத்திருப்பதாலேயே,

போர் நிறுத்த ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளதாக, இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இரு தரப்புக்கும் இடையில் அணமைக்காலமாக இடம்பெற்ற சந்திப்புக்களில், இவ்வாறான அலங்காரங்களை மேற்கொள்வதில்லை எனவும், மக்களின் உணர்ச்சியைத் தூண்டும் நடவடிக்கையில் ஈடுபடுவதில்லை எனவும், உடன்பாடு காணப்பட்டதாகவும், அதில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் போன்ற மாவட்டங்களில் கடந்த சில நாட்களான இவ்வாறான போர்நிறுத்த மீறல் இடம்பெற்று வருவதாகவும்,

எனினும் படையினர் பொறுமை காத்துவருவதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் ஆலோசனையுடன், அதிகாரபூர்வமற்ற பதாதைகளையும், வரைபடங்களையும் நீக்குவதற்குப் படையினர் முயற்சி எடுத்து வருவதாகவும், பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதி - பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்ற பின்னர், இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாவீரர்களின் எண்ணக் கனவுகள் எம் நெஞ்சங்களில் உரமிடப்பட்டன

## தமிழீழ அரசியற்றுறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன்

(யாழ்ப்பாணம்)

மீண்டும், மீண்டும் மாவீரர்கள் வித்தாகி வீழ்வதை நாம் விரும்பவில்லை. சமாதானத்தினூடாக விரைவான தொரு விடியலையே விரும்புகின்றோம் எனத் தமீழ விடுதலைப் புலிகளின் துணை அரசியற்துறை பொறுப்பாளர் சோ.தங்கள் தெரிவித்தார்.

நேற்று யாழ்.இந்துக்கல்லூரியில் தமிழ் மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

எமது வீரர்கள் அற்புதமானவர்கள், பெரும் சாதனை யாளர்கள், கிடைக்கவொண்ணாத அரும் செல்வங்கள். அவர்கள் மாவீரர்களாக மண்ணில் வீழும்போது, நாம் கலங்காமல் இருக்கமுடியாது.

எத்தனையோ அரிய செல்வங்கள் வித்தாகி வீழ்ந் துள்ளார்கள். அவர்களின் மரணங்கள் பல சாதனைக ளைப் படைத்திருந்தாலும், எம்மால் அந்தப் பிரிவை தாங்கமுடியாதநிலைகூட ஏற்பட்டுள்ளது.

அதனால்தான், தொடர்ந்தும் இந்த மண்ணில் எமது வீரர்கள் வீழ்வதைத் தவிர்க்கும் பொருட்டு, சமாதானப் பேச்சின்மூலம் நல்லதொரு தீர்வை எமது மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க முயல்கின்றோம்.

ஆனாலும், இந்த மண்ணில் வீழ்ந்த மாவீரன் ஒவ் வொருவரினதும் கனவுகள் - எம் நெஞ்சங்களில் பசும ரத்தாணியாய் உரமிடப்பட்டுள்ளன.

அவற்றை அடிப்படையாகக்கொண்டே பேச்சு வார்த்தையின்போதும் சரி, இடைக்கால நிர்வாகத் திட்ட வரைபிலும் சரி, எமது யோசனைகளை முன்வைத்து வருகின்றோம்.

இன்று ஏற்பட்டுள்ள சூழலுக்குக் காரணமானவர்கள் இந்த மாவீரர்கள். இவர்களைப் பெற்ற ஒவ்வொருவரும் போற்றப்படவேண்டியவர்கள், மகிழ்ச்சியடைய வேண் டியவர்கள், இந்த மண்ணின் உத்தமர்கள்.

உறுதிகொண்ட அந்த மாவீரர்களை நினைவுகூரும் போது, எமது வரலாற்றுப் பாதையில் பெரும் சாத னைகள் நினைவில் வருகின்றன.

எதனையும் சாதிக்கமுடியும் என்பதை எமக்கு உணர்த்திச்சென்றவர்கள் அவர்கள் எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.நிலான் தனது உரையில் -

தமிழ் இனத்தின் விடுதலைக்காய் வழியொன்று உள்ளது. அதுவே எமக்கு, நாம் எதிர்பார்க்கும் விடி வைப் பெற்றுத்தரக்கூடியது என்ற உணர்வை ஊட்டிச் சென்றுள்ளார்கள். அதனை நாம் அனைவரும் பின்பற்றி, சுதந்திரத் தமிழீழத்தை அமைக்க முயலவேண்டும்.

விடுதலைப் புலிகளின் பலத்தை அதிகரிக்கும் சக்தி - மாணவராகிய எம்மிடமே உள்ளது என்றார்.

யாழ். இந்துக் கல்லூரியின் தமிழ் மாணவர் மன் றத்தின் பொறுப்பாசிரியர் சிவராஜா தனது உரையில் -

எமது மானம் காத்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்த அஞ்சும் சில பாடசாலைகள் - மாவீரர் நினைவு நாள் என்ற பதத்தைக்கூட சிறிய மட்டையில் எழுதிப் போட்டுவிட்டு, தமது வழமையான செயற்பாடுகளை மட்டும் பார்த்துக்கொண்டு இயங்குகின்றன. இது மிகவும் வேதனைக்குரியது. தமது இன்னுயிர் ஈந்த மாவீரர்க ளுக்கு - நாம் கொடுக்கும் உன்னத மதிப்பு இவ்வளவு தானா? என எண்ணி தலைகுனிய வேண்டியதாக வுள்ளது என்றார். (ப)

# தமிழகத்திலிருந்து 43 அகதிகள் தாயகத்திற்குத் திரும்பியுள்ளனர்

(நெடுந்தீவு)

தமிழ்நாட்டு அகதிமுகாம்களில் தங்கியிருந்த இலங்கை அகதிகள் 43 பேர், நேற்றுமுன்தினம் நெடுந் தீவில் தரையிறங்கியுள்ளனர்.

இந்திய இழுவைப் படகுமூலம் ஜெகதாப் பட்டினத்திலிருந்து நெடுந் தீவு பெரியதுறை பகுதியில் வந்து இறங்கியவர்களை - நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பொறுப் பேற்று - பொலிஸார், கடற்படையி னரால் விசாரணைகள் செய்யப்பட்டு, உடமைகளும் பரிசோதனை செய் யப்பட்டது.

15 குடும்பங்களைச் சேர்ந்த 43 பேரில், 12 குடும்பங்களைச் சேர்ந்த 37 பேர் நெடுந்தீவைச் சேர்ந்தவர் கள். ஒருவர் புங்குடுதீவையும், 4 பேர் மன்னாரையும், ஒருவர் வவுனி யாவையும் சேர்ந்தவர்களாவர்.

நெடுந்தீவைச் சேர்ந்தவர்களைத் தவிர, ஏனையோர் யாழ்.செயகத்தில் ஒப்படைக்கப்பட்டு, சொந்த இடங்க ளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு ஊடாக மீளக்குடிய மரும் மக்கள் தொகை - கடந்த ஒரு மர்தமாக இல்லாதிருந்து, மீண் டும் தற்போது ஆரம்பித்திருப்பது டன், இன்னும் பல குடும்பங்கள் வர எதிர்பார்த்திருப்பதும் குறிப்பிடத் தக்கது. (113)

## சிறுவர் முதியோர்தின பரிசளிப்பு விழா

சமூகசேவைகள் திணைக்களத் தின் அனுசரணையுடன் நெடுந்தீவில் நடைபெற்ற சிறுவர், முதியோர் தினம் தொடர்பான போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு - இன்று நெடுந் தீவு உதவி அரசாங்க அதிபர் பணி மனையில் இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டிகள் யாவும் நெடுந்தீவுக் கல்விக்கோட்டத்தி லுள்ள பாடசாலை மாணவர்களி டையே நடாத்தப்பட்டது. இதில் - கட்டுரை, கவிதைப் போட்டிகள் இடம்பெற்றன. இப்போட்டிகளில் வெற்றிபெற்ற முதல் மூன்று மாண வர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# எழுவைதீவில் இருந்து புறப்படும் படகில் அதிகமாக பயணிகள் ஏற்றப்படுகின்றனர்

## செயலகத்தில் மக்கள் முறைப்பாடு

(நெடுந்தீவு)

எழுவைதீவிலிருந்து புறப்படும் முதற்படகில் - அளவுக்கு அதிக மான பயணிகள் ஏற்றப்படுவதனால், பயணிகள் பயத்துடனேயே பயணம் செய்வதாக அந்தப் பகுதி மக்கள் - ஊர்காவற்றுறை பிரதேச செயல ருக்கு மகஜர்மூலம் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்ப டுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை கைய ளிக்கப்பட்ட அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது -

காலையில் அனலைதீவு துறை யிலிருந்து அதிகளவான பயணிக ளுடன் எழுவைதீவிற்கு வரும் பய ணிகள் படகு - இங்கு காத்திருக் கும் ஏராளமான பயணிகளையும் ஏற்றிக்கொண்டு, ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் துறைக்குச் செல்லும்போதே, பயப்பீதியுடன் பயணம் மேற்கொள்வதாகவும்,

சில சந்தர்ப்பங்களில் அதிக மான பயணிகள் பயணம் மேற் கொள்ளக் காத்திருக்கும்வேளை யில், குறிப்பிட்ட எண்ணிக்கையி னரை மட்டும் படகு ஓட்டுநர்கள் ஏற்றிச்செல்வதாகவும்,

ஏனையோர் அந்தப் படகினை எதிர்பார்த்து காத்திருக்கவேண்டிய நிலை ஏற்படுவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளதுடன்,

பயணசிரமங்களைச் சீர்செய் யும் பொருட்டு, எழுவைதீவு பயணி கள் படகின்மூலம் முதற்சேவையை ஆரம்பிக்குமாறும்,

அனலைதீவிலிருந்து 9 மணிக் குப் புறப்படும் படகு - இரண்டாவது சேவையாக எழுவைதீவிற்கு வருவ தற்கு ஏற்ற ஒழுங்குகளை மேற் கொள்ளுமாறும்,

மாலைவேளையில் இடம்பெறும் படகுச்சேவைகள் வழமைபோல இடம்பெறுவதற்கும் ஏற்ற நடவ டிக்கைகளை எடுக்குமாறும், பிரதேச செயலரை - இந்தப் பிரதேச மக்கள் மகஜர்மூலம் கேட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (83)

## பாலர் கல்விக் கழக கலைவிழா

பாலர் கல்விக் கழகத்தின் கீழ் இயங்கும் பதினாறு பாலர்பாடசாலை கள் ஒன்றிணைந்து நடாத்தும் வரு டாந்த கலைவிழா - நாளை மறு தினம் காலை 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை யின் கழகத் தலைவர் எஸ்.பி. காசிநாதன் ஆசிரியர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக இந்து சமய விவகார அமைச்சின் உதவிப் பணிப் பாளர் சிவ.மகாலிங்கம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். இந்த நிகழ்வுகளைத் தொடர்ந்து 16 பாலர் பாடசாலைகளுக்கு இடையிலான ஒரு போட்டி நிகழ்ச்சி நடாத்தப்பட்டு, பரிசில்கள் வழங்கப்படவுள்ளது. அத்தோடு, சிறுவர்களின் பல்வேறு பட்ட கலை நிகழ்வுகளும் நடை பெறவுள்ளன.

# தேசியத்தலைவரின் பிறந்ததினத்தை முன்னிட்டு அம்புலன்ஸ் வண்டி அன்பளிப்பு

தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரனின் பிறந்தநாளை முன்னிட்டு, நேற்று ஐயங்கன்குளம் திலீபன் ஞாபகார்த்த மருத்துவமனைக்கு அம்பு லன்ஸ் வண்டியொன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது.

வேலணை கிழக்கு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த இராமலிங்கம் சம்மந்தன் என்பவரே, இந்த அம்புலன்ஸ் வண்டியை அன்பளிப்புச் செய்துள்ளார்.

பின்தங்கிய இடமான ஐயங்கன்குளத்தில் இயங்கிவரும் இந்த மருத் துவமனையானது, அப்பகுதி மக்களுக்குப் பாரிய தொண்டாற்றி வருகின்ற அதேவேளை, நோயாளர்களை ஏற்றிச்செல்வதற்கு வாகனவசதி இன்றி பெரும் சிரமப்பட்டு வந்துள்ளனர். இந்த அம்புலன்ஸ் வண்டிமூலம் பொதுமக்கள் பெரிதும் நன்மையடைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கலாசார உத்தியோகத்தர் கலையகத்தின் கலாசார விழா நாளை ஆரம்பமாகும்

(யாழ்ப்பாணம்)

கலாசார உத்தியோகத்தர் கலை யகம் நடாத்தும் வருடாந்த யாழ். மாவட்ட கலாசார விழா - நாளை யும், நாளை மறுதினமும் யாழ்.வீர சிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள் ளது.

கொமர்ஷல் வங்கியின் அனுசர ணையுடன் நடாத்தப்படவுள்ள இந் தக் காலாசார விழாவானது, இரண்டு நாட்களுக்கு இடம்பெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கும், 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கும் நிகழ்வுகள் ஆரம்பமா கும்.

'நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம்' என்ற மகாகவி பாரதியாரின் கூற்றின் தொனிப் பொருளை மையமாகக்கொண்டே, இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

எமது தமிழ் பண்பாட்டின் ஆரம் பகாலக் கலைவடிவங்களை உள் ளடக்கியதாக - காவடி, கரகம், கோலாட்டம், மயிலாட்டம், கம்படி, சிலம்படி, பொய்க்கால் குதிரை யாட்டம், தமிழ்மன்னர் உருவம் போன்ற வேடங்களைத் தாங்கிய கலாசார பவனி ஒன்றும் இடம்பெற வுள்ளது.

29 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் யாழ். வண்ணை சிவன்கோயிலிலிருந்து இசைக்கருவிகள் ஒலிக்க, அழகான பண்பாட்டுப்பவனி ஆரம்பமாகி, ஊர் வலமாகக் கஸ்தூரியார் வீதி, ஆஸ் பத்திரி வீதியூடாக வீரசிங்கம் மண் டபத்தைச் சென்றடையும். அத னைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம் பமாகவுள்ளன.

விழாவில் - வடமோடி, தென் மோடி நாட்டுக்கூத்துக்கள், வசந்தன் கூத்து, ஒயிலாட்டம், கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், பட்டிமண்டபம், கவியரங்கம், இன்னிசைக் கச்சேரி எனப் பல்வேறு நிகழ்வுகள் இடம் பெறவிருக்கின்றன என்பதும் குறிப் பிடத்தக்கதாகும். (ப)

வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : கெ.மதுசங்கர்
முகவரி : தில்லையம்பதி, கோண்டாவில்.

மூன்றாவது அகவையில்



பெயர் : ந.கஜீபன்
முகவரி : கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்

நான்காவது அகவையில்



பெயர் : பா.டிஷாந்தன்
முகவரி : வளர்மதி , கரவெட்டி கிழக்கு.

ஐந்தாவது அகவையில்



பெயர் : கு.தர்ஷன்
முகவரி : வட்டுக் கிழக்கு, சித்தங்கேணி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றோர் ஒப்பம்

# குளிர்காலத்தில் இருந்து சருமத்தை காக்க...!



குளிர்காலத்தில் நம்மில் பலருக்கும் மிகவும் அதிகமாக சருமப் பாதிப்புக்கள் ஏற்படுவது வழக்கம்தான். சரும வறட்சி, சருமம் சுருங்கிப் போதல் போன்ற பல பிரச்சினைகள் ஏற்படும். இப்படி கடும் குளிர் நாட்களில் சருமம் பாதிக்கப்படும் விதங்கள், அதற்கான காரணங்கள், அதற்கான ஆயுர்வேத சிகிச்சைகள் பற்றி இங்கு விரிவாகக் கூறுகிறார் அழகுக்கலை நிபுணர்.

சருமத்தில் வறண்ட சருமம் என்பது ஒரு வகை. ஆனால், சாதாரண சரும வகையைப் பெற்றவர்களுக்கும்கூட இந்தக் குளிர் காலத்தில் சருமம் வறண்டுபோகும் வாய்ப்பு அதிகம். குளிர்காலத்தில் காற்று மிகவும் குளிர்ந்து விடுகிறது. சருமத்தின் அடியிலுள்ள எண்ணெய்ப் பசையை உற்பத்தி செய்யும் சுரப்பிகள்- இந்தக் குளிர்காற்றினால் தாக்கப்படுவதால், அதன் செயற்பாடு குறைகிறது. ஆனால், சருமம் உலர்ந்து போவதுடன், அதன் மென்மையையும் இழந்துவிடுகிறது. ஆங்காங்கே சிவந்தும், தடித்தும்போகும் வாய்ப்பு உண்டு. சருமத்தின் உலர்வைத் தடுக்க - ஈரப்பசை கொண்ட சோப் மற்றும் அழகு சாதனங்களையே பயன்படுத்தவேண்டும்.

நம் சருமம் என்ன வகையைச் சேர்ந்தது என்பதை நாமே ஒரு எளிய சோதனையின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

நம் முகத்தில் உள்ள பகுதிகளை மூன்றாகப் பிரிக்கலாம். நெற்றிப்புறம் (அதைச் சுற்றியதை) ஜி ஸோன் எனப்படும். தாடைகள் மற்றும் கன்னங்களைச் சுற்றியுள்ள பகுதிகள் 'சி' ஸோன் என்றும், தொண்டைப் பகுதியில் இறங்குமிடம் 'சீ' ஸோன் என்றும் வழங்கப்படும். இவைகள் முழுமையுமே எண்ணெய்ப் பசை கொண்ட சருமமாகவோ, உலர் சருமமாகவோ இருக்கலாம் அல்லது இவை மூன்றில் இரண்டு எண்ணெய்ப் பசை கொண்டனவாகவும், ஒன்று உலர்ந்தும் அல்லது ஒன்று எண்ணெய்ப் பசையுடனும், இரண்டும் உலர்ந்தும் இருக்கலாம்.

அப்படியிருக்கும் சருமத்தைக் காம்பினேஷன் ஸ்கின் என்பர்.



மிகவும் உலர்ந்த சருமம் பி.ஹெச் பேலன்ஸ் (Presence of Hydrogen & Iron) இல்லாமல் இருக்கும். இந்த வகைச் சருமம் மிகவிரைவில்- அதுவும் குளிர்காலம் என்றால் மிகமிக விரைவில் வறண்டுவிடும். எனவே, இப்படிப்பட்ட சரும வகை கொண்டவர்கள் - குளிர்காலத்தில் உலர் தன்மைகொண்ட சோப் வகைகளைத் தவிர்த்து, ஈரப்பசையுள்ள சோப்புக்களையே பயன்படுத்தவேண்டும்.



சருமத்தின் ஈரத்தன்மையைக் காக்கும், ஈரப்பசை கொண்ட கிறீம் வகைளை ஒரு அழகுக் கலைநிபுணரின் ஆலோசனையின் பேரில் பயன்படுத்தல் நல்லது.


குளிர்நாட்களில் வெளியில் செல்லும் முன்பு, குளிர்ந்தநீரால் முகம் கழுவுதல் தவறானது. இப்படிச் செய்வதால், சருமம் மேலும் உலர்ந்துபோகும். சருமம் சோர்வடையாமல் இருக்கும்வண்ணம் சில பயிற்சிகளுடன், அன்றாடம் நடைப்பயிற்சியும் செய்யவேண்டும். இப்படிச் செய்வதால் சருமம், முடி இரண்டுக்குமே சீரான இரத்த ஓட்டம் கிடைக்கும். இவைகள் பொலிவுடன் விளங்கும். உதடுகளில் எண்ணெய்ச் சுரபிகள் எதுவும் கிடையாது என்பதுதான், அவைகளில் உலர்வும், வெடிப்பும் ஏற்படக்காரணம்.

ரோஜா இதழ்களை நன்கு நசுக்கி, அதனுடன் (உப்பு கலக்காத) வெண்ணெய்யும், பாலாடையும் சேர்த்து நன்கு குழைத்து, உதடுகளில் தடவி 15 நிமிடங்கள் விட்டு, பின்பு கழுவிவிடவேண்டும்.

உதடுகளின் உலர்வுத் தன்மை இதனால் நீங்கும். ஈரப்பசையுள்ள வஸ்லினை அடிப்படையாகக்கொண்ட உதட்டுச் சாயங்களைப் பயன்படுத்தி நல்ல பலனைத் தரும். ஈரத் தன்மைகொண்ட கிறீம்களைப் பயன்படுத்தி மேக் - அப் (Make up) போடுவதால், சருமம் உலராமல் இருக்கும்.

# எல்லாம் பெற்றோர் கையில்

இளம் பெண் தனியாகவோ அல்லது பெண்களுடன் சேர்ந்தோ வீதியில் செல்லும் பொழுது, பல இளம் வயது ஆண்களாலோ அல்லது நடுத்தர வயது ஆண்களாலோ கேலிப் பேச்சுக்குள்ளாக்கப்படுவது இன்று சதாரணமாக நிகழ்கின்றது. ஆண்கள் - பாலியல்ரீதியாகப் பெண்களைக் கிண்டல் செய்வது, அவர்கள் மனம் நோகும்படி பேசுவது, அருவருக்கத்தக்க பாடல்களைப் பாடுவது, சாயத் தண்ணிகளை பெண்கள்மேல் தெளிப்பது, அவர்களின்



உடைகளை இழுப்பது, வேண்டுமென்றே அருகில் வந்து இடிப்பது போன்ற பல ரகளைகளைச் செய்கிறார்கள்.

இதற்கு மூலகாரணம் - இவ்வாறான ஆண்களின் குடும்பங்களே. குடும்பங்களில் பெண்பிள்ளையை ஒரு விதமாகவும், ஆண்பிள்ளையை வேறுவிதமாகவும் நடத்துகின்றனர். பெண் என்றால் - தன் வீட்டில் முடக்கிக்கிடக்கவேணடும் என்ற வகையில்தான் பலர் தம் பெண்பிள்ளைகளை வளர்க்கின்றனர். இதனால், ஆண்பிள்ளையின் மனதில் பெண் என்பவள் வீட்டுவேலை செய்யவும், கணவனுக்குப் பணிவிடை செய்யவும், ஆண்களிடம் அடங்கியிருப்பதற்கும்தான் பிறப்பெடுத்திருக்கிறார்கள் என்ற தவறான அபிப்பிராயம் தோன்றிவிடுகின்றது.

இவ்வாறான கோணத்தில் பெண்ணை நோக்கிய ஆண்களுக்கும் - பெண்கள் படிப்பதும், வேலைக்குச் செல்வதும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதாவது அடங்கி, ஒடுங்கி இருக்கவேண்டிய பெண்களுக்கு இவ்வளவுசலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கிறதே, அவர்களின் நடமாட்டம் நசுக்கப்படவேண்டும் என்ற கீழ்த்தரமான புத்தி தோன்றுகின்றது. ஆண்களின் இவ்வாறான புத்தியே, பெண்களைக் கேலிப்பேச்சிற்கு ஆளாக்குகின்றது.

வெளியிடங்களில் ஆண்களால் இடைஞ்சல் ஏற்பட்டாலும், பெண்கள் வீட்டில் வந்து கூறப்பயப்படுகின்றனர். காரணம் - நாளையிலிருந்து தனியாகப் படிக்கப்போகவேண்டாம். மேற்கொண்டு படிக்கவேண்டாம், வீட்டிலேயே இருந்து படி எனக் குடும்பத்தவர்கள்- பெண்களை முடக்கிவிடுகின்றனர். உண்மையான பாசமுள்ள குடும்பத்தவர்களாக இருந்தால், பெண்களின் உரிமைகளை நசுக்கவோ, ஒடுக்கவோ கூடாது. அவளிலிருந்து அச்சத்தை விலக்கி, வாழ வழிவகுத்துக்கொடுங்கள்.

# சவப்பெட்டியில் வரும் பணிப்பெண்கள்

இலங்கையின் கிராமப்பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான இளம் பெண்கள்- மத்தியகிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்புத்தேடிச் செல்வதுவழமை. சிலர் ஓரளவு பணத்துடனும், புதிய வாழ்க்கை குறித்த நம்பிக்கையுடனும் திரும்பிவருவது வழமை, எனினும், இவை யாவற்றையும்விட வழமையான விடயமாகிவிட்ட ஒன்று உண்டு. அது மாதத்துக்கு 20 அல்லது 25 இலங்கைப் பணிப்பெண்களின் உடல்கள் மத்திய



கிழக்கிலிருந்து வருகிறது.

கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலைய அதிகாரிகளைப் பொறுத்தவரை, இது வழமையான விடயமாகிவிட்டதாகக் குறிப்பிடுகின்றனர். புள்ளிவிபரங்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன. ஏனைய மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்தவர்களின் உடல்களும் விமானநிலையத்தினூடாகச் செல்வதாகவும், மாதமொன்றிற்கு 2912 உடல்களுக்கு மேல்வருவதாகவும் தெரிவிக்கப்படுன்றது.

மத்திய கிழக்கிற்குச் செல்லும் அனைவரும் - இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின்மூலம் செல்லாததால், முழுமையான புள்ளி விபரங்கள் தெரியாமல் உள்ளன. துஷ்பிரயோகமும், பாலியல் வன்முறைகளும், கொலைகளும், தற்கொலைகளும் மத்தியகிழக்கிற்குச் சென்ற இலங்கைப் பெண்களின் வாழ்க்கையில் ஒரு பகுதியாகவுள்ளன. ஒக்ரோபர் 15 ஆம் திகதி, கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில தினசரி ஒன்றில் - மத்திய கிழக்கில் இராஜதந்திரிகளால் - இலங்கைப் பணிப்பெண்கள் துன்புறுத்தப்படும் சம்பவம் குறித்துச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. 2001 இல், அபுதாபியில் பணிபுரிந்த இலங்கைப் பெண்மணியொருவர் - இலங்கை இராஜதந்திரியொருவராலும், நண்பராலும் பாலியல்வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அந்தப் பெண்மணி அபுதாபி தூதரகத்தில் அடைக்கலம் புகுந்துள்ளார். அங்கும் அவர் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளார். குறிப்பிட்ட இராஜதந்திரிகளுக்கு உதவியாக இருந்தவர்களுக்கு, அபுதாபி நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளதுடன், பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு நஷ்டஈட்டினை வழங்குமாறும் கோரியுள்ளது. எனினும், அபுதாபியிலுள்ள தூதரகம் குறிப்பிட்ட பெண்ணை இலங்கைக்கு பலவந்தமாகத் திருப்பியனுப்பிவிட்டது. எனினும், வேலைவாய்ப்புப் பணியகங்கள் இந்த குற்றச்சாட்டுக்களை ஏற்கத்தயாரில்லை. பத்திரிகைகளே இதனைப் பெரிதுபடுத்துகின்றன என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

# சமையல் குறிப்புகள்

❖ இட்லி மென்மையில்லாமல் இருக்கிறதா?
நாலு பச்சைஅப்பளங்களை தண்ணீரில் நனைத்து, மிக்சியில் போட்டு ஒரு நிமிடம் ஓடவிட்டு, மாவில் கலந்து, அதற்குப்பின் வார்த்துப் பாருங்கள்- இட்லி பூ மாதிரி மென்மையாக இருக்கும்.

❖ சக்கரைப் பொங்கலின் சுவை மேலும் பிரமாதமாக இருக்க - கொஞ்சம் ரின்பால் சேர்த்துப் பாருங்கள் - அற்புதமாகச் சுவையை சுவைக்கலாம்.

❖ முந்திரிப்பருப்பை எறும்பு அரிக்காமல் இருக்க - சிறிதளவு பச்சைக் கற்பூரத்தைப் போட்டு வைக்கவேண்டும்.

❖ சாம்பாருக்குத் துவரம் பருப்பை அவிய வைக்கும்போது, பருப்புடன் ஒரு கரண்டி வெந்தயத்தையும் கலந்து வேகவைத்தால் - சாம்பார் இரவுவரை இருக்கும். உடம்பிற்கும் நல்லது.

❖ மிக்ஸர் செய்பவர்கள் மிளகாய்ப் பொடிக்குப் பதிலாக - மிளகுப்பொடியைக் கலந்து கொண்டால், எண்ணெய்யால் ஏற்படும் வயிற்றுப்பிரட்டல் வராது. நல்லதும் கூட.

# வாழ்க்கை என்னும் படகைச்செலுத்த உதவும் பணம்

'படகைத் தாங்கிச்செல்லும் தண்ணீரால், அதேபடகைக் கவிழ்க்கவும் முடியும்' - இது ஒரு சீனப்பழமொழி. சீனர்கள் பணத்தைத் தண்ணீரோடு ஒப்பிடுவார்கள். வாழ்க்கைப் படகைச்



செலுத்த உதவும் பணத்தை, நாம் தண்ணீரைப்போல் கரைத்தால், அது எம்மை மூழ்கடித்துவிடும் என்பதே அதன் அர்த்தமாகும்.

பணத்தின் அருமையை இளவயதிலேயே உணர்த்துவது அவசியமாகும். ஆனால், பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவே வேலைக்குச் செல்வதாகக் கூறும் பெற்றோரும், பணத்தை அவர்களுக்காக அநாவசியமாகச் செலவு செய்கிறார்கள்.

இன்றைய இளைஞர்கள் பலர் விலையுயர்ந்த ஆடைகளை உடுத்துகின்றார்கள். கைத்தொலைபேசிகளைத் தேவை இருக்கின்றதோ, இல்லையோ பாவிக்கின்றார்கள். படிக்கும் வயதில் நண்பர்களுடன் பொழுதைக் கழிக்க பணம் செலவிடுகிறார்கள். தங்களது தேவைகளைக் கட்டுப்படுத்த எந்தவிதமான முயற்சியும் அவர்கள் எடுப்பதில்லை.

ஆனால், தங்களது செயலின் விளைவுகளை இந்த இளைஞர்கள் புரிந்து கொள்வார்களா? அவர்களுக்கென்று ஒரு குடும்பம் ஏற்பட்டு, வீட்டுச் செலவு, பெற்றோரைப் பராமரிக்கும் செலவு என்றுவரும்போது, இவர்களால் சமாளிக்கமுடியுமா?

தீய பழக்கங்கள் இளமையில்தான் ஆரம்பிக்கும். கட்டுப்பாடில்லாமல் பணத்தைச் செலவழிக்கும் பழக்கம்- பெரியவர்களாக வளர்ந்த பிறகும் தொடரும். தேவைக்குப் போதிய பணம் இல்லாவிட்டால், கடன் வாங்கத் தூண்டும் அதுவே பின்னர் பிரச்சினைகளைக் கொண்டுவரும்.

எனவே, பணத்தைப் பொறுப்பாகச் செலவழிக்க இளையவர்கள் மட்டுமல்ல, அனைவருமே கற்றுக்கொள்வது அவசியம் பெற்றோரும் முன்னுதாரணமாகச் செயற்பட்டு, பிள்ளைகளுக்கு விளக்கவேண்டும். வரவுக்கு மீறிய செலவு ஆபத்தைக் கொண்டுவரும் என்பதை, அவர்களுக்கு உணர்த்தவேண்டும்.

பணவசதி உள்ளவர்களும் தங்களுடைய செலவுகளைக் கட்டுப்படுத்துவது, வருங்காலத்தில் சிறப்பாக வாழ வழிவகுக்கும். அத்துடன் நிதி, நிர்வாக, கல்விதவிர, பொது அறிவை வளர்த்துக்கொள்வதும் இளையவர்களின் செலவுகளைக் கட்டுப்படுத்த உதவும்.

சில நாட்களுக்கு முன்னர், ஓர் அமெரிக்கப் பெண் - தனக்குப் பரிசாகக் கிடைத்த பணம் முழுவதையும் கம்போடிய சிறுவர்களுக்கு நன்கொடையாகக் கொடுத்து விட்டார். இதற்குக் காரணம் - ஒருமுறை அவர் அங்கு சென்றபொழுது, அழுக்கேறிய படுக்கையில் கிடந்த குழந்தைகளின் அவல நிலையைப் பார்த்து, தன்னால் இயன்ற உதவியை அவர்களுக்கு செய்யவேண்டும் என்று எண்ணியதேயாகும்.

அந்த பெண்ணின் பெற்றோர் இருவரும் மருத்துவர்கள். இருந்தாலும், தனக்குச் சொந்தமாகப் பழைய கணினி ஒன்றை வாங்க இப்பொழுது படித்துக் கொண்டே பகுதி நேரமாக வேலை செய்கிறாராம் இந்த இளம் பெண். வசதியில்லாமல் வாடுவோர் பலரது வாழக்கையில், அப்பெண்ணின் தன்னலமில்லாத செயல் நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது.

எமது பிரதேசத்திலும் வசதி இல்லாதோரும், உடற்குறை உள்ளோரும் இருக்கின்றார்கள். அவர்களின் நிலையை நேரில் பார்த்து, அவர்களுக்கு உதவும் உயரிய உள்ளத்தைச் சிறு வயதிலிருந்தே பிள்ளைகளிடம் வளர்ப்பது அவசியம். நல்ல வாழ்க்கையின் அடிப்படை- மற்றவர்கள் மீது காட்டும் அக்கறைதான். அதுவே, நல்லசமூகத்தை உருவாக்கும். 'அனைவரும் மாமனிதராகலாம்...' அதற்குத் தேவை பரிவு நிறைந்த இதயம் மட்டும்தான்' - என்றார் மார்டின் லூதர் கிங். மற்றவர்களுக்கு உதவி செய்து, அதன் வழி நமது வாழ்க்கையை நாம் சீரிய பாதையில் இட்டுச்செல்லலாம்.

உண்மையில் கடந்த காலத்தைப் பற்றி நினைத்துப்பார்க்கையில், எங்களுடைய உள்ளத்தில் ஆழப்பதிந்திருப்பது அன்புள்ளத்துடன் நாம் செய்த காரியங்களாக மட்டுமே இருக்கும்.

# வண்ணம் சொல்லும் வண்ணமலர்கள்

அழகுக்காகவும், வாசனைக்காகவும் மலர்களை வீட்டில் வளர்க்கின்றோம். வீட்டிற்கு முன்னால் இடமிருந்தால் சிறிய பூந்தோட்டம் அமைக்கலாம். மேல் வீடுகளில் இருப்பவர்கள் சின்ன மண்தொட்டிகளில் பூக்களை வளர்க்கிறார்கள். சில பூக்களை மட்டும் தலையில் சூடிக்கொள்கின்றோம். ஏனைய பூக்களைக் கொண்டு வீட்டை அழகுபடுத்தலாம். அழகான பூக்களை வளர்ப்பது ஒரு கலை. அதே போன்று பூச்சாடிகளில் பூக்களை அழகாக வைப்பது மற்றொரு கலையாகும்.



பூவால் வீட்டை அழகு செய்ய விரும்புபவர்கள் முதன் முதலில் பூக்கன்றுகளைப் பற்றி தெரிந்து கொள்ளவேண்டும். கூர்ந்து நோக்கினால், சில பூக்கள் சில காலத்தில்தான் மலர்ந்து நம்மைக் கவரும். சில பூக்கள் வருடத்திற்கு இருமுறை பூக்கும். சில பூக்கள் ஆண்டு முழுவதும் பூத்துக்குலுங்கும். சூழல் மற்றும் மண்ணின் தரத்திற்கு ஏற்றாற்போல் பூச்செடிகள் வளரும்.

முதலில் நாம் எமது ஊரில் பூக்கும் பூக்களைப் பற்றித் தெரிந்துகொள்வது நல்லது. இடத்திற்கு ஏற்றாற்போல செடி, கொடி, புதர் மற்றும் பெரிய மரங்களை வைக்கலாம். பூக்கன்றுகளை வளர்ப்பதற்கு முன்பு, அதன் காலத்தினை மனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். இதனால், ஆண்டு முழுவதும் வீட்டில் மலர்களின் வாசனை நம்மை மகிழ்விக்கும்.

பூந்தொட்டியில் வளர்க்கும்போது, பூவின் நிறத்தை மனதில் கொள்ள வேண்டும். சிலருக்குக் கடும் நிறம் பிடிக்கும். சிலருக்கு மெல்லிய நிறம் பிடிக்கும். ரோஜாவில் ஒரேபூவில் பலவித வண்ணங்கள் கலந்திருப்பதைக் காணலாம். பூந்தொட்டியில் பூக்கன்று வளர்ப்பவர்கள் - குறைந்தது ஆறுமணி நேரமாவது தொட்டியின்மீது சூரிய ஒளிபடும்படி வைக்க வேண்டும். பூச்சாடிகள் பித்தளை, பீங்கான், கண்ணாடி, மண் போன்றவற்றினால் பல நிறங்களில், பல வடிவங்களில் கிடைக்கின்றன.

பூக்களின் நிறத்தைவிட, பூச்சாடி கடும் நிறமாக இருக்கக்கூடாது. பூச்சாடியின் நிறம், பூக்களின் நிறத்தை குறைத்துக் காட்டுவதுபோல் இருக்கக்கூடாது. சாடியும் அழகாக இருக்கவேண்டும். சாடியில் வைக்கப் போகும் மலர்களை - காலை சூரிய அஸ்தமனத்திற்கு முன்போ, மாலையில் சூரியன் மறைந்த பின்பேதான் பார்க்கவேண்டும். காலையில் தண்ணீர் ஆவியாகாமல் இருப்பதாலும், மாலையில் பூக்களிலுள்ள இனிப்புத்தன்மையாலும் குளிர்மையாக இருக்கிறது. பூக்களைப் பறிக்கும் போது, பூவின் காம்புப்பகுதி ஒரேயளவில் இருப்பதாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். பூக்களிலுள்ள தண்ணீரின் சதவீதத்தின்படி அது நீண்டநேரம் வாடாமல் புதிய பூவாகவே இருக்க, அதன் காம்புப்பகுதியைத் தண்ணீரில் நனையும்படி வைக்கவேண்டும். பூக்களை வைக்கும்போது, பெரிய பூக்களை கீழ்ப்பகுதியிலும், சிறியப் பூக்களை மேல் பகுதியிலும் வைக்க வேண்டும். பூக்களால் வீட்டை அழகு படுத்தும்போது, மலர்களின் மணத்தையும் மனதில்கொள்ள வேண்டியது அவசியம்.

# வாழ்க்கை என்னும் விளையாட்டு

வாழ்க்கையிலும், இலக்கியங்களிலும் இன்பம் என்பது ஒரு சுவையான அங்கமே. அதேபோல், வாழ்க்கையில் துன்பத்தைச் சந்திப்பதும் தவிர்க்கமுடியாத ஒன்றாகும். நாம் அனுபவிக்கின்ற ஒவ்வொரு மகிழ்ச்சியான விடயங்களிலும் பூரிப்படைகின்றோம். துன்பத்தைக் கண்டாலோ துவண்டு போய் விடுகின்றோம். இதுதான் வாழ்க்கையா? எனச் சலிப்படைகின்றோம். வாழ்வில்



துன்பம் குற்றமல்ல. அதைக்கண்டு துவண்டுபோவதுதான் குற்றம்.

வாழ்வென்ற நந்தவனத்திற்குள் நுழையக் காத்திருக்கும் நெஞ்சங்களில், கற்பனைகள் சுழன்றுகொள்ளும். தமக்கு கணவனாக அல்லது மனைவியாக வருபவர் இப்படித்தான் இருக்கவேண்டும் என்றெல்லாம் ஒரு பெரிய பட்டியலையே போட்டு வைத்துக்காத்திருப்பார்கள்.

இறுதியில், எதிர்பார்ப்புக்கு நேர்மாறாக கணவன், மனைவி அமைகின்றபோது, தாம் வாழ்வில் தோல்வி கண்டுவிட்டதாகத் தம்மை சிறுமைப்படுத்திக் கொள்கிறார்கள். வாழ்க்கை இப்படித்தான் இருக்கவேண்டும் எனச் சிந்திப்பதைவிட, அமைந்துவிட்ட வாழ்க்கைத்துணை எப்படி இருக்கிறது, என்பதைப் புரிந்துகொண்டு வாழப்பழகுவதில்தான் - வாழ்வின் இரசனையே இருக்கிறது. விரும்பியது கிடைக்கவில்லையென ஏங்குவதைவிட விரும்பியோ, விரும்பாமலோ கிடைத்ததை விலைமதிப்பற்றதாக எண்ணுவதில்தான்- வாழ்வின் இன்ப அத்தியாயம் ஆரம்பிக்கப்படுகின்றது. துன்பங்களைச் சகித்துக்கொள்ளவேண்டும். துன்பம் ஏன் வருகிறது என எண்ணுவதைவிட, துன்பம் எப்படி வருகிறது என எண்ணுங்கள். மகிழ்ச்சியையும், திறமையையும் கண்டுபிடிப்பது கடினமானதே. அவை கண்டு பிடிக்கக்கூடியதுமல்ல. ஆனால் அவற்றை நிரூபிக்கமுடிகிறது.

சிறு விடயங்களை அனுபவிக்கமுடிகிறது. ஆனால் 'அனுமானிக்க முடியாமல் இருப்பது சகஜம். இன்பமோ, துன்பமோ அவற்றை அனுபவித்தேயாகவேண்டும். நெருப்புச் சுடும் எனச் சொல்லமுடியும். அது எவ்வாறு சுடும் எனச் சொல்லமுடியாது. இங்கும் சுடுகின்ற துன்பத்தை அனுபவிக்கத்தான் முடிகிறது, அனுமானிக்க முடிவதில்லை.

எனவே, துன்பத்திலும் சுவையிருக்கிறது. துவண்டு போகாதீர்கள். துன்பத்திலும் சிரியுங்கள். அப்போதுதான் நீங்கள் மனிதர்கள்.

# தாய்ப்பால் முதல் முதலுதவி வரை பொம்மைகளுடன்

கைக்குழந்தைக்கு ஏதாவது பொம்மை வாங்கவேண்டும்மென்றால், தொட்டிலுக்கு மேலே தொங்கும் குடை, இராட்டினத்தை வாங்குவார்கள். அது சாவியைக் கொடுத்தால் சுற்றும், கூடவே ஒலியும் எழும்பும் அதை குழந்தை கண் விரித்து பார்த்து ரசிக்கும் அழகே அழகு அல்லது இருக்கவே இருக்கிறது கிலுக்கிட்டி. குழந்தையின் கையில் பிடித்துக்கொண்டு அசைத்து ஒலியெழுப்ப, சத்தம் வரும் திசையில் எல்லாம் தலையைத் திருப்புவதும் தனி அழகுதான்.



நான்கு மாதமாகும்போது குழந்தையால் தன் கையில் சிறு பொருட்களைப் பிடித்துக்கொள்ள முடிகிறது. அதற்காகப் பாசம்பொங்க பலவித பொம்மைகளை வீட்டில் வாங்கி குவிக்க வேண்டாம். ஏனென்றால், அவற்றுக்கிடையே உள்ள வேறுபாடுகளைக் கண்டு உணரும் சக்தி குழந்தைக்கு முழுவதுமாக ஏற்படுவதில்லை. எனவே, மிருதுவான பந்து போன்றவற்றை வாங்கிக்கொடுக்கலாம்.

ஆறுமாதம் தாண்டிவிட்டால், கையில் கிடைக்கும் பொம்மையை வாயில் வைத்துக்கொள்ளும். இதனால், வேண்டாத பழக்கங்கள் வந்து விடுகின்றன. எனவே, கூர்மையான பொம்மையோ, சாயம் போகும் பொம்மையோ கொடுக்க வேண்டாம். கைகளுக்குப் பயிற்சி அளிக்கும் வகையில் வேறு விளையாட்டுப் பொருட்களை வாங்கிக்கொடுக்கலாம். ஒரு கூடையில் நிறையப்பொருட்களை (பாதுகாப்பானவையாகவும், நிறை குறைந்தவையாகவும் இருக்கும்) நிரப்பிக் குழந்தையிடம் கொடுத்து விடுங்கள்.

அது பாட்டில் அவற்றைக் கீழே கொட்டும். பின் அவற்றைக் கூடையில் எடுத்துப் போடும். அப்போது குழந்தையின் முகத்தில் தோன்றும் உற்சாகம் - சுற்றியிருப்பவர்களிடமும் வேகமாகப் பரவும்.

பந்தைக் கீழே தட்டி விளையாடுவது என்பதில் எவ்வளவு விஷயங்கள் இருக்கின்றன தெரியுமா? கைகளையும், கண்களையும் ஒருங்கிணைக்கும் அற்புதமான பயிற்சி இது.

ஒரு வயதாகும்போது, கார்களைக் கொடுப்பதில் தவறில்லை. ரெடிபியர் போன்ற பொம்மைகளை இன்னும் வளர்ந்தபிறகு கொடுக்கலாம் என்று தோன்றுகிறது. ஏனென்றால், இதுபோன்ற புதுப் பொம்மைகளில் அழுக்குச்சேர சந்தர்ப்பம் அதிகமாகிறது. அந்த அழுக்கு குழந்தையின் உடலுக்குள் சென்று, ஆஸ்துமா நோயைக் கொண்டுவந்துவிடும்.

துப்பாக்கியால் சுடுவது, பற்றறியில் இயங்கும் பொம்மைகள் ஆகியவை இயந்திரத்தனமானவை. அதாவது அவற்றினால் குழந்தைகளின் அறிவுத்திறன் அதிகமாவதில்லை. அதேசமயம் நினைவாற்றலை வளர்க்கும் விளையாட்டுக்களும், கற்பனை சக்தியைத் தூண்டும் பொம்மைகளும் மிகவும்தேவையானது.

வாங்கிக் கொடுக்கும் பொம்மைகள் ஒரு பக்கம் இருக்கட்டும் - குழந்தையோடு இருந்து விளையாடுங்கள். இரு கைகளையும் விரித்து, அதற்குள் குழந்தையை குநதவையுங்கள். பிடித்துவிட்டால் வெற்றி, பிடிக்காவிட்டால் நீங்கள் தோல்வி. நீங்கள் அடிக்கடி தோல்வியாகி, குழந்தைக்குச் சந்தோஷத்தைக் கொடுங்கள். இவை உணர்வுபூர்வமான பலத்தை ஏற்படுத்தும்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்*
*நுண்பொருள் காண்பது அறிவு.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

### மாவீரர் நாள் உரை உணர்த்தும் செய்தி

சமாதானத்தை வலியுறுத்திவரும் சர்வதேசமும், சமாதானத்தை உறுதியாக ஏற்க முடியாமலும், போரை முழுமையாக நிராகரிக்க முடியாமலும் அல்லாடும் சிறிலங்காவின் இரட்டை அரசுகளும், சமாதானத்தை சுயகௌரவத்துடன் கூடிய அரசியல் உரிமைகளை உள்ளடக்கிய உறுதியானதும், நிரந்தரமானதுமான தீர்வொன்றின் மூலம் எட்ட விரும்பும் தமிழ்மக்களும், சமாதானத் தீர்வென்பது தாம் விரும்பும் தமது அரசியல் அபிலாஷைகளை எட்ட வசதியாகவும், தமது விருப்ப எல்லைகளுக்கு அப்பால் போகக்கூடாது என்பதில் நியாயமற்ற அழுங்குப்பிடியாக இருக்கும் மேலாதிக்க - வல்லாதிக்க நாடுகளும், தமிழின விரோத சக்திகளும் மிகவும் எதிர்பார்ப்புடனும், ஏகப்பட்ட ஊகங்களுடனும் காத்திருந்த அந்த வேளை, நேற்றுமாலை - அதாவது மாவீரர் நாளன்று மாலை 5.40 முதல் 6.05 வரையான காலப்பகுதிக்குள் வந்து போயிற்று.

தமிழீழத் தேசியத்தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் மாவீரர் நாள் உரைபற்றியே நாம் குறிப்பிடுகின்றோம்.

க்ஃ ஆண்டுக்கொருமுறை மட்டுமே தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவின் துடிப்பாய் ஒலிக்கும் அந்தக் குரல் தமிழ் மண்ணைப் பற்றி, மக்களைப்பற்றி, இரண்டினதும் விடுதலை பற்றி, இடை நிலவும் சமாதானம் பற்றி, சிறிலங்கா அரசின் நிலை, மற்றும் நிலைப்பாடு பற்றி, சர்வதேசத்தின் இலங்கை விவகாரம் தொடர்பான நோக்கு மற்றும் போக்கு பற்றி, இறுக்கமான கூறும், தெளிவானதுமான மொழியில் துல்லியமாகப் பிரகடனம் செய்வது மாவீரர் நாள் உரையின் போதுதான்.

2001 ஆம் ஆண்டு இதேநாளில் - இதே மாவீரர் நாள் உரையின்போதுதான் பிரபாகரன் அவர்கள், போர்முனையில் மாபெரும் வரலாற்றுப் புகழ்மிக்க வெற்றிகளைப் பெற்று, தமிழ் மக்களின் தலைகளை கம்பீரமாகவும், பெருமிதமாகவும், நிமிரவைத்த நிலையில் சிறிலங்கா படையுடனான ஒரு தலைப்பட்ச போர்நிறுத்தம் பற்றிய அறிவித்தலை வெளியிட்டு சமாதானம் மீதான தனது பற்றுறுதியை சர்வதேச சமூகத்திற்கு பிரகடனம் செய்தார்.

அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட ஆட்சி மாற்றம் காரணமாக ரணில் பிரதமரானதும், போர்நிறுத்த உடன்பாடு, புரிந்துணர்வு உடன்படிக்கை ஆகியன எட்டப்பட்டதும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகி 6 சுற்றுக்கள் வரை தொடர்ந்ததும், அது சமாதானம் குறித்த நம்பிக்கையை மக்கள் மற்றும் சர்வதேச சமூகத்தவர் மத்தியில் விதைத்ததும் வரலாறாகும். தற்போது பல்வேறு காரணிகளால் நகர்வற்றுப் போயிருக்கும் சமாதான முயற்சிகளில் எதிர்காலம் கேள்விக்குறியாகி, சிறிலங்காவின் அரசியல் அதிகார பீடங்கள் குழப்பங்களுக்கு உள்ளாகி, சமாதான அனுசரணையாளர்கள் திகைப்புக்குள்ளாகி, மக்கள் அமைதி குறித்து அச்சத்திற்குள்ளாகியுள்ள நிலையில் சமாதானத்தின் முக்கிய பங்காளியான விடுதலைப் புலிகளின் தலைவர் என்ன சொல்லப் போகிறார் என்பது அனைவரும் அறியத்துடித்த விடயமேயாகும்.

இந்தச் சூழலில் அவரின் நேற்றைய உரையானது இன்றைய சமாதானம், மற்றும் அரசியல் நிலைமையின் யதார்த்தம், அதன் எதிர்காலம் குறித்த தீர்க்கதரிசனம், தமிழ்மக்களின் எதிர்பார்ப்பு, விடுதலைப் புலிகளின் சமாதானம் மற்றும் போர்நிறுத்தம் தொடர்பான பற்றுறுதி, சிங்கள இனவாதிகளின் நிலைப்பாடு, ரணிலின் கையறுநிலை, சந்திரிகாவின் பொய்மை நிலை என அனைத்தையும் உள்ளடக்கியதாக அமைந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

அவர் தனது உரையில் சமாதானத்தை வலியுறுத்தி நிற்கும் சர்வதேச சமூகத்திற்கு மிகவும் தெளிவாக தமிழ் மக்களினதும், விடுதலைப் புலிகளினதும் சமாதானம் குறித்த பற்றுறுதியை வெளிப்படுத்திய அதேவேளை, சங்கள அரசின், சமாதானம் குறித்த குழப்பமான, உறுதியற்ற வெற்று நிலையையும் சுட்டிக் காட்டியிருந்தார்.

சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க முடியாது போய்விட்டதற்கான காரணிகளையும், சந்திரிகாவின் யுக்தி நடவடிக்கைகளையும் தெளிவுபடுத்திய அவர், சந்திரிகா - ரணில் அரசுக்கு எதிராக மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகளுக்கு கூறிய காரணங்கள் பொய்யானவை என்றும், சமாதான நகர்வுகளைக் குழப்புவதே அவரின் முக்கிய நோக்கமென்றும் விவரித்தமை குறித்து சர்வதேச சமூகம் கவனத்தில் கொள்ளவேண்டிய தருணமும் இதுவே ஆகும்.

இந்த உரையில் அவர் அது குறித்துச் சொல்லவில்லை, இது குறித்து விளக்கவில்லையென குறைகூறவும், விமர்சிக்கவும் ஒரு கூட்டம் காத்திருக்கவே செய்யும்.

ஆனால், எதை, எந்தவேளையில், எப்படிச் சொல்ல வேண்டுமோ அதனை அந்தந்த வேளையில், அப்பழுக்கின்றித் தெளிவுபடுத்தி கூறுவது ஒரு தலைவனுக்குரிய பண்பாகும்.


அதனைத்தலைவர் பிரபாகரன் தெளிவாகவும், உறுதியாகவும் செய்துள்ளார்.

சமாதானம் என்பது ஒருவழிப்பாதையல்ல.

சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் மனப்பூர்வமாக ஒத்துழைத்தால் மட்டுமே அது சாத்தியமாகும்.

விடுதலைப் புலிகளின் உறுதிப்பாட்டையும், சமாதானத்துக்கான ஒத்துழைப்பையும், தமது உரை மூலம் பிரபாகரன் அவர்கள் வெளிப்படையாகப் பிரகடனம் செய்துள்ளதுடன், சிங்கள அரசு தொடர்ந்தும் தமிழர்களை ஏமாற்றி அடக்கு முறையை அவர்கள் மீது மீண்டும் பிரயோகிக்க நினைக்குமானால், அவர்கள் தமது சுயநிர்ணய உரிமையை பயன்படுத்தி, பிரிந்து தனியரசு அமைக்கும் முயற்சிகளுக்கு மீண்டும் செல்ல நிர்ப்பந்தம் ஏற்படுமென்று கூறி தமிழ்மக்களின் நிலைப்பாட்டையும், அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தியும் உள்ளார். சிங்கள அரசும், சர்வதேச சமூகமும் மிகவும் ஆத்ம சுத்தியுடன் சிந்திக்க வேண்டிய விடயம் இதுவாகும்.

## நாடும் நடப்பும்




செய்தி: ஐ.தே.கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையே இணக்கம் ஏற்படுத்த முயற்சிக்கிறேன் என்கிறார் சந்திரிகா.

# இருதரப்புக்கும் இடையிலான சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படும்

## வர்த்தக நுகர்வோர்துறை அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சியானது - சரியானமுறையிலேயே முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. அடுத்த வருடம் சமாதான முயற்சியானது, இருபகுதியினருக்குமிடையே தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படும். இவ்வாறு தெரிவித்தார் - வர்த்தக நுகர்வோர்துறை அமைச்சர் ரவி கருணாநாயக்க.

வெளிநாட்டு ஊடகவியலாளர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே, அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

ஜனாதிபதிக்கும், பிரதமருக்குமிடையேயான தற்போதைய நெருக்கடியால், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள திட்டவரைபானது, தமிழீழத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல, அவர்களது திட்டவரைபானது, முன்மொழிவு மட்டும்தான். அதுவும் பேச்சுவார்த்தைமூலம் தீர்த்துக்கொள்ளப்படும்.

முன்மொழிவுகள் எல்லாம் தனிநாட்டுக்கான கருத்தென நான் நினைக்கவில்லை. ஜனாதிபதி மூன்று அமைச்சுப்பதவிகளைப் பொறுப்பெடுத்ததே, தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு காரணமாகும். எனவே, சமாதான முயற்சிகளை ஜனாதிபதி முன்னெடுக்கவேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் - விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. இதற்கு ஏன் ஜனாதிபதி எதிர்ப்புத் தெரிவிக்கின்றார் எனவும் அவர் கேள்வி எழுப்பினார். ஜனாதிபதியும், பிரதமரும் நாட்டின் தற்போதையநிலைமையை உணர்ந்து, ஒன்றுசேர்ந்து நாட்டிற்குத் தேவையான நிரந்தர சமாதானத்தைக் கொண்டுவரவேண்டும்.

ஆனால், பிரதமர் ரணிலின் சமாதான முயற்சிகளுக்கு மக்கள் வழங்கிவரும் ஆதரவினைக் கண்டு, ஜனாதிபதி சந்திரிகா கோபமடைந்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் பாதகமானமுறையில் சென்றுகொண்டிருந்தவேளை, அதனைச் சரியானமுறையில் கையாண்டு, பொருளாதார வளர்ச்சி 5.6 வீதத்தை எட்டியதற்குப் பிரதமரின் நடவடிக்கைகளே காரணமாகும். இதன் முக்கிய அம்சமாக - இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையையும், இரு நாடுகளுக்குமிடையிலான அதிகரித்த ஏற்றுமதியையும் குறிப்பிடலாம்.

இலங்கைக்கான தனியார் விமானப் பயணத்தை இந்தியாவிலிருந்து ஆரம்பிக்க, அண்மையில் அந்த நாட்டு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இது அதிகரித்த வியாபாரம், உல்லாசப்பயணம் போன்றவற்றால் அதிக நன்மையை, நாடு அடையவிருக்கிறது. இந்த விமானப் பயணத்திற்கான அனுமதியை - அமைச்சரவை டிசம்பர் மாத நடுப்பகுதியில் வழங்குமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நாட்டுப்பற்றாளர்களைச் சேர்க்காத தேசிய அரசு வெற்றி பெறாதாம்!

## திலக் கருணாரட்ண கூறுகிறார்

(கொழும்பு)

நாட்டுப்பற்றாளர்களைச் சேர்க்காத தேசிய அரசு ஒன்று ஒருபோதும் வெற்றி அளிக்காது என சிஹல உறுமயவின் தலைவர் திலக் கருணாரட்ண தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

தற்போது குறுகிய அரசியல் லாபம் கருதியே தேசிய கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே திலக் கருணாரட்ண இந்தக் கருத்தினை முன்வைத்தார்.

தேசிய அரசாங்கம் என்ற பெயரில் இன்று என்ன செய்கிறார்கள். முதலில் ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றார். ஜனாதிபதியின் இந்த நடவடிக்கையால் அரசியல் நெருக்கடியேற்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினையில் இருந்து மீள்வதற்கு ஒரே நடவடிக்கையாக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும் இணையவேண்டுமென்ற கருத்து மேலோங்கியுள்ளது.

இந்த நாட்டின் பாராளுமன்றத்தில் எத்தனைபேர் நாட்டுப்பற்றாளர்களும், தேச அபிமானிகளும் இருக்கின்றார்கள் என்பது எமக்குப் பெரும்பிரச்சினையாக இருக்கின்றது என்றார்.

# விளம்பர சேவையின் அனுமதி மீள்பரிசீலனை செய்யப்படும்!

## யாழ். மாநகர ஆணையாளர் நடவடிக்கை

யாழ். நகரப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற விளம்பரசேவையின் அனுமதி தொடர்பாக, மீள்பரிசீலனை செய்யவுள்ளதாத் தெரிவிக்கப்படுகிறது.

மாநகரசபை ஆணையாளருக்கும், வர்த்தகசங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே, இந்த முடிவு எடுக்கப்பட்டது. இந்த விளம்பர சேவையினர் ஒலியைக்கூட்டி விளம்பரம் செய்வதால், தமது வியாபார நடவடிக்கைகள் பாதிப்படைவதாக வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் குற்றஞ்சுமத்தினர்.


தொலைபேசி உரையாடல்களை மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும், வாடிக்கையாளர்களோடு பேசமுடியாதிருப்பதாகவும் இவர்கள் சுட்டிக்காட்டினர். வைத்தியசாலை நோயாளிகளும் இந்த விளம்பரசேவையால் பாதிப்புறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனால், இந்த விளம்பரசேவையை உடனடியாக நிறுத்த வேண்டும் அல்லது உரிய மாற்றீடான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என ஆணையாளரிடம் வர்த்தகசங்கப் பிரதிநிதிகளால் கோரிக்கை விடப்பட்டது.

இதனை ஏற்றுக்கொண்ட ஆணையாளர் - இது தொடர்பாகத் தனிப்பட்டரீதியிலும் தனக்குப் பலமுறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், உடனடியாக இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் உறுதியளித்தார்.

இந்த விளம்பரசேவை - தமிழ்க் குழுவொன்றின்மூலம், 'யாழோசை' என்னும் பெயரில் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன். விளம்பரசேவைக் காரியாலயத்திற்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ச)

# எதிரிப்பாசறைகள் எதிர்பார்ப்புடன் காத்திருக்கும் மாவீரர் நாள் உரை



வீடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மாவீரர் உரை, ஏனைய வருடங்களில் பெற்று வந்த கவனத்தையும் ஈர்ப்பையும் விட, இவ்வருடம் மிகுந்த பரபரப்புடனும் உன்னிப்புடனும் எதிர்பார்க்கப்பட்டது.

கடந்த காலங்களில், கடுமையான யுத்தத்தின் மத்தியில் அல்லது யுத்தம் தவிர்க்கப்பட்டு சமாதான நிலைப்பாடுள்ள நிலையில், மாவீரர் உரை இடம்பெறும்போது, அந்தந்த நிலைப்பாட்டிற்குப் பதில் கூறும் உரையாக, மாவீரர்நாள் உரை அமைவது கண்கூடு. இவற்றிற்கு மாறாக, இம்முறை, போர் தொடங்குமா, சமாதானம் குழம்புமா, சர்வதேச மத்தியஸ்தம் திரும்புமா, கொழும்பு அரசியல் தலைமை திருந்துமா, தமிழின விடுதலை அரும்புமா என்றெல்லாம் பல கேள்விகள் உலகெங்கும் கேட்கப்படும் ஒரு இக்கட்டான காய் நகர்த்தலின் மத்தியில் இந்த மாவீரர் உரை வெளிவரவுள்ளது.

சர்வதேச நாடுகள் பலவற்றினதும் பெருமளவிலான ஆதரவைப் பெற்றிருந்த சமாதான முயற்சிகளை குழப்பும் விதமாக ஜனாதிபதியின் செயற்பாடுகள் அமைந்து விட்டமையாலேயே, இந்தக் குழப்ப நிலைமை ஏற்பட்டுள்ளது.

நவம்பர் மாதம் 4 ஆம் திகதி முக்கிய மூன்று அமைச்சுப் பொறுப்புக்களையும் தன்னுடைய பொறுப்பில் எடுத்துக்கொண்டு, நாடாளுமன்றத்தையும் ஒத்திவைத்த ஜனாதிபதியின் செயற்பாடுகள் தொடர்பாக உடனடியாகவே சர்வதேச நாடுகள் பலவும் தமது அக்கறையை வெளிப்படுத்தியிருந்தன.

அமெரிக்கா, பிரித்தானியா, நோர்வே, கனடா, இந்தியா உட்பட பல நாடுகளும் இந்த விவகாரம் தொடர்பாக தமது அக்கறையை வெளியிட்டிருந்ததுடன், ஜனாதிபதியின் நடவடிக்கை சமாதான முயற்சிகளைப் பாதித்துவிடக்கூடாது என்றும் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இந்நிலையில், கடந்த வியாழனன்று, ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றம் ஜனாதிபதியின் நடவடிக்கைகளைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளமை, ஜனாதிபதிக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது.

ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்துடனும், பிரதமருடனும் ஜனாதிபதி அனுசரித்தே செயற்படவேண்டும் என ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம் வெளியிட்ட அறிக்கை, ஜனாதிபதியின் நடவடிக்கை முறைகேடானது என்கின்ற செய்தியையே சொல்லாமல் சொல்லி நிற்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சர்வதேச நாடுகளின் இத்தகைய நெருக்கடிகள் தவிரவும், உள்நாட்டிலும் வர்த்தக சமூகத்தின் கடுமையான எதிர்ப்பை ஜனாதிபதி எதிர்கொண்டுள்ளார்.

ரணில் அரசு அதிக அதிகாரங்களை விடுதலைப் புலிகளுக்கு வழங்குவதுடன், நாட்டைப் பிளவுபடுத்த முயற்சிக்கிறது என்ற கோசத்துடன் சந்திரிகா பல அதிரடி நடவடிக்கைகளில் இறங்கி, ஜே.வி.பி.உட்பட ஏனைய சிறு கட்சிகளைப் புளகாங்கிதமடைய வைத்துள்ளார்.

இருந்தாலும், சந்திரிகா கோரியுள்ள 'தேசிய அரசை' அமைப்பதற்கு ஜே.வி.பி. ஆதரவுதர மறுத்துள்ளது.

விடுதலைப் புலிகள் கையளித்துள்ள வடக்கு - கிழக்கு இடைக்கால தன்னாட்சி நிர்வாக அதிகார சபை வரைபை கொள்கையளவில் ஏற்பதாக ரணில் கூட்டுக் கட்சியும், மேலதிக பேச்சுவார்த்தைகளை நடாத்த அடிப்படையாக அமையலாம் என்று சந்திரிகா கூட்டணியும் ஏற்றுக்கொண்டாலும், ஜே.வி.பி., முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., சிஹல உறுமய உட்பட இன்னும் இன்னோரன்ன சிறிய கட்சிகளும் முற்றாக நிராகரித்துள்ளன.

ஒரு பக்கத்தில் பொ.ஐ.மு. கட்சியுடன் இணையத் துடிக்கும் ஜே.வி.பி., கொள்கைகளில் முற்றாக முரண்பட்டு நிற்கிறது. முஸ்லிம் கட்சிகளின் நிராகரிப்பு போன்ற சில ஒரு பாதகமான சூழலையும் உருவாக்கியுள்ளன.

- கிறிஸ் பற்றன் - விடுதலைப் புலிகளின் தலைமை சந்திப்பு

- தேசிய கூட்டமைப்பின் குழப்பங்கள்

- வட - கிழக்கு நிர்வாகக் கட்டமைப்பு அலகை, பல கட்சிகள் எதிர்ப்பது

- தேசிய நல்லிணக்க அரசு அமைக்கும் திட்டத்திற்கு இருக்கும் எதிர்ப்பு

- சமாதானப் பேச்சுவார்த்தை தடங்கல்

- வடக்கு கிழக்கு இணைப்பை தற்காலிகமாகவே நீடித்திருப்பது

- பாதுகாப்பு அமைச்சு பறிக்கப்பட்டுள்ளமை

- யுத்த நிறுத்த உடன்படிக்கை செல்லுபடியற்றது என்று ஜனாதிபதி கூறியுள்ளது

- ஜனாதிபதிக்கே பாதுகாப்பு அதிகாரம் முழுமையாக உள்ளது என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு

- இந்தியாவின் அசமந்தப் போக்கு

இப்படி பல விடயங்கள் தொக்கு நிற்கும் நிலையில் - விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் கருதப்படுகிறது.

முன்னரெல்லாம், சிறிய யுத்த நிறுத்த மீறல் காரணங்களுக்காகவெல்லாம் இரு பகுதியுமே, மாறி மாறிப் போரை ஆரம்பித்து வருவதில் நாட்டம் காட்டியிருந்தாலும், இம்முறை வழமைக்கு மாறாக, இரு பகுதியினரும் போர்நிறுத்தத்தில் அளவுக்கதிமான நம்பிக்கையும் உறுதியும் கொண்டிருப்பதை நாம் அவதானிக்க முடிகிறது.

இதற்கு சர்வதேச அழுத்தங்கள் ஒரு வெளிப்படைக் காரணமாகச் சொல்லப்பட்டாலும், இன்னும் பல காரணங்கள் இருபகுதியிலுமே இருப்பது வெள்ளிடைமலை. காரணங்கள் எதுவாக இருந்தாலும், அப்பாவிப் பொதுமக்கள் தொடர்ந்தும் பாதிப்புக்களையும் இழப்புக்களையும் சந்திப்பார்கள் என்ற நிதர்சனமான உண்மையை இரு பகுதிகளும் உணர்ந்துள்ளன.

இதற்கிடையில், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஜனவரியில் ஆரம்பமாக உள்ளதாகக் கூறப்படும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அரசாங்கத்தின் தரப்பில் தலைமை தாங்கப்போவது யார் என்ற கேள்வி உள்நாட்டில் மாத்திரமல்ல சர்வதேச மட்டத்திலும் இருந்து எழுப்பப்படுகின்றது.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் பிரதமர் தலைமையிலான குழுவினரா அல்லது ஜனாதிபதி தலைமையிலான குழுவினரா அல்லது பிரதமரும், ஜனாதிபதியும் இணைந்த தரப்பாகவா கலந்துகொள்ளப்போகின்றனர் என்ற எதிர்பார்ப்பு அனைத்து மட்டங்களிலும் எழுந்துள்ளது.

இலங்கையின் எதிர்கால இருப்பு சூன்யமாகிப்போயுள்ள நிலையில், மாவீரர்தின உரையில், சமாதானத்திற்கும் போருக்கும் சம அழைப்பு விடுக்கப்படுமா, அல்லது ஈழத் தமிழர்கள் சமாதானக் காற்றை நிரந்தரமாகச் சுவாசிக்க, விடுதலைக் காற்று முளைவிடுமா என்பதே சர்வதேச ஏக்கமாக எழுந்துநின்றது!

**கனடாவிலிருந்து சுதந்திரன்**

# இந்த வார பலன்கள்

## 28.11.2003 ~ 04.12.2003 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சனி |
| செவ் யுரே | 28 மா. 4.40 தனு-புத<br>29 இ. 9.25 கும்-சந்<br>01 பி.இ. 5.10 மீன-சந்<br>04 மா. 4.15 மே-சந் | | |
| சந் நெப் | | | குரு |
| சுக் | புத, சூரி | கேது | |

### மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)

மேடராசியில் ஜனனமானவர்களுக்கு இந்த வாரம் நன்மை, தீமை கலந்த பலன்கள் தென்படுகின்றன. குடும்பத்தில் இடையிடையே சச்சரவுகள் தோன்றக்கூடும். வருவாயிலும் பார்க்க செலவு கூடுதலாகக் காட்டும். தொடங்கும் கருமங்கள் தாமதத்தின் மேல் நிறைவேறும். விவசாயிகளுக்குப் பிரயாசை கூடுதலாக இருப்பினும் சந்தைப்படுத்தலில் போதிய லாபம் கிடைக்கும். திருமண விடயங்கள் தாமதப்பட்டுக்கொண்டு போகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பழுவும் பொறுப்பும் அதிகமாகும். வியாபாரிகளுக்கு முதலுக்கேற்ப விற்பனை நடக்காது. லாபம் குறைவாகவே இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் குழப்பநிலை தோன்றினாலும் முயற்சிக்கேற்ப சித்தி உண்டு.

### இடபம்

(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)

இவர்கள் பல நன்மையான பலன்களை எதிர்பார்க்கக்கூடியதாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சம்பவங்கள் நிகழ இடமுண்டு. வெளிநாட்டிலிருந்து பிள்ளைகள் உதவி வழங்குவார்கள். குடும்ப வருவாய் சிறப்படையும். பெண்களுக்கு மகிழ்ச்சிக்குக் குறைவிருக்காது. தேகாரோக்கியம், குடும்ப நலன் சிறப்பாக அமையும். இல்லற வாழ்க்கையில் இணைய விரும்புவர்களுக்கு கருமம் அனுகூலமாகும். தூரப் பிரயாணங்களும் கிட்டும். ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் கூடிய ஆர்வம் இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவும், பாராட்டுக்களும் கிடைக்கும். வர்த்தகத்துறையினர் தமது முதலீடுகளை மேலும் பெருக்கத்தக்க வாய்ப்புகளைப் பெறுவர். வங்கி நிலையும் ஒத்துழைக்கும். மாணவர்கள் ஊக்கத்துடன் செயற்படுவதால் சித்தியும், கௌரவமும உண்டாகும்.

### மிதுனம்

(மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )

மிதுனராசியினருக்கு பெரும்பாலும் நன்மையான பலன்களே நடக்கும். செய்தொழில்மூலம் போதிய வருமானம் கிடைக்கும். குடும்ப அங்கத்தவர்கள் மனநிறைவுடன் வாழ்க்கை நடத்தமுடியும். செய்கருமங்கள் யாவும் இனிதாக விரைவில் சாத்தியமாகும். விவசாயத் துறையினரும் தமது அறுவடைகளைச் சந்தைப்படுத்துவதில் அக்கறையாக இருப்பர். திருமண நிகழ்வுகளும் விரைவில் கைகூடும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும். வருவாயும் நிறைவாக இருக்கும். உத்தியோகத்தர்கள் சிலருக்கு வசதியான இடமாற்றம், கௌரவம் ஏற்படலாகும். மாணவர்கள் மத்தியில் உற்சாகமும், புதுத்தென்பும் ஏற்பட்டு வெற்றியைக் கொடுக்கும்.

### கடகம்

(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)

இவர்களுக்கு தொழில்முறையில் எவ்வளவு முயன்றாலும் வருவாய் மட்டாகவே கிடைக்கும். வீட்டுக் கருமங்களைக் கொண்டு நடத்துவதில் கஷ்டம் காணும். குடும்பத்தில் அநேகமாக அமைதியின்மையும், சுகக்குறைவுகளும் தோன்றும். வைத்தியச்செலவும் தவிர்க்கமுடியாமல் அதிகமாகும். பிள்ளைகளின் உதவிகள் உரிய தருணத்தில் வந்துசேராது. பிரயாணத்தை எதிர்நோக்குவோர் ஏமாற்றமடைவர். இனபந்துக்களிடையேயும் கருத்து வேற்றுமை தோன்றும். வியாபாரிகளுக்கு வியாபாரம் மந்தநிலையிலேயே நடக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகமாகும். மாணவர்கள் மத்தியில் மனவிரக்தியும் ஏமாற்றமும் காட்டும்.

### சிங்கம்

(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)

சிங்க ராசியைச் சேர்ந்தவர்களுக்கு ஓரளவு நன்மையான பலன்களுண்டு. தொழில் முயற்சிகளில் அபரிமிதமான லாபம் கிடைக்காவிடினும் தேவைக்கேற்ற வருவாய் கிட்டும். கணவன் மனைவியிடையே கருத்து வேற்றுமைகள் தோன்றினாலும், அவை சமாளிக்கப்பட்டுவடும். பிள்ளைகள் தேவையற்ற பிரச்சினைகளைத தரக்கூடும். விவாக கருமங்கள் இழுபறி நிலையிலேயே இருக்கும். உத்தியோகத்தர்களுக்கும் உயர்ச்சிகள் கிடைப்பதில் தாமதமேற்படும். தொழிலாளிகள் ஓரளவு வருவாயைப் பெறுவார்கள். பிரயாணத்தை எதிர்பார்ப்போர் ஏமாற்றமடைய நேரிடும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். வருவாய் குறையும். மாணவர்கள் ஊக்கத்துடன் தொழிற்பட்டால் முன்னேற்றமடைவர்.

### கன்னி

(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)

இவர்கள் இந்தவாரம் பல நன்மையான பலன்களைக் காண்பர். எடுத்த முயற்சிகளெல்லாம் வெற்றியாகமுடியும். பழைய கொடுக்கல் வாங்கல் பிணக்குகள் இருப்பின் அவை தீரும். வீட்டில் மனச்சந்தோஷமும் குதூகலமும் காணப்படும். பெரியோர்களின் ஆசியும் உதவியும் கிடைக்கும். நண்பர்களின் உதவியும் ஒத்தாசையும் உண்டு. வெளிநாட்டிலிருந்து பிள்ளைகள், இனத்தவர்கள் வருகைதருவார்கள். வீட்டில் பெண்கள் சுறுசுறுப்புடனும் மகிழ்ச்சியுடனும் காணப்படுவர். திருமணத்தை எதிர்நோக்கியிருப்போர் கருமம் கைகூடி மகிழ்ச்சியாகக் காணப்படுவர். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு, முன்னேற்றம் கிட்டும். மாணவர்கள் மனநிறைவும் மகிழ்ச்சியும் உடையவராக இருப்பர்.

### துலாம்

(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)

துலாராசியில் பிறந்தவர்கள் தொழில்முறையில் சிறப்பும் நல்ல வருவாயும் பெறுவார்கள். குடும்பத்தில் நல்லுறவு வளரும். பிள்ளைகள் முதலானோரும், இனத்தவர்களும் உதவுவார்கள். பெண்கள் மனநிறைவுடையவர்களாகக் காணப்படுவர். வீட்டில் சுபநிகழ்வுகள் இடம் பெறும். திருமணமாகாதோருக்கு மணவாழ்க்கை விரைவில் அமையும். உத்தியோகத்தர்கள் மன நிறைவுடன் பணியாற்றுவர். வர்த்தகர்கள் புதிய முதலீடுகளைச் செய்வதில் ஊக்கமாக இருப்பர். வியாபாரம் நன்கு நடக்கும். விவசாயத்துறையிலுள்ளோரும நல்ல லாபம்பெற்று மகிழ்ச்சியாகக் காணப்படுவர். மாணவர்கள் ஆசிரியர்களிடத்தில் பணிவாக நடந்து அவர்களின் நன்மதிப்பைப் பெறுவர்.

### விருச்சிகம்

(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

இவர்களுக்கு நற்பலன்கள் மிகக் குறைவாகவே தென்படுகிறது. எவ்வளவு முயன்றாலும் தொழிலில் லாபம் கிடையாது. சோர்வும், மன நிம்மதிக் குறைவும் இருக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் மிஞ்சி, பிரிவினைகளைக்கூடக் கொடுக்கலாம். கடன்தொல்லைகளும், கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகளும் தலைதூக்கும். தேகாரோக்கியக் குறைவும், குடும்ப சுகக்குறைவும் தோன்றும், மருத்துவச் செலவும் அதிகரிக்கும். உறவினர், புத்திரர் துன்பம் வரலாம். விவாக முயற்சிகளில் இழுபறிகள் தொடர்ந்த வண்ணம் இருக்கும். வர்த்தகர்களுக்கு வருவாய் குன்றும். புதிய முதலடுகளைத் தவிர்த்தல் நன்று. உத்தியோகத்தர்களுக்கு சிறு விஷயங்களிலும் மேலதிகாரிகளுடன் மனஸ்தாபம் தோன்றும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றத்தில் தடைகளேற்படும்.

### தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)

தனுசு இராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் மூலம் வருவாய் உண்டு. எனினும் வரவிலும் பார்க்க செலவு கூடுதலாகவே காட்டும். ஆடம்பரச் செலவுகளால் பண விரயத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கும். தொடங்கும் கருமங்கள் அலைச்சலின்மேல் நிறைவேறும். குடும்பப் பெண்கள் - குடும்பத்தில் செலவு கூடுதலாக இருப்பினும், ஒருவாறு சமாளித்துக் கொள்வார்கள். எல்லாவற்றிலும் நிதானம் தேவை. வர்த்தகர்கள் முயற்சிக்கேற்ப இலாபம் பெறுவர். உத்தியோகத்தர்கள் கடுமையாக உழைக்கவேண்டும். திருமணம் முதலியனவும் இழுபறியின் மேல் கைகூடவாய்ப்புண்டு. மாணவர்கள் கடுமையாக முயற்சி எடுக்கவேண்டும். இல்லையேல் சித்தியை இழக்கநேரிடும்.

### மகரம்

(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)

இவர்களுக்கு இந்தவாரம் பிரயாசை கூடுதலாக இருக்கும். வருவாய் மத்திமமாகும். குடும்பத்தில் பலவிதமான செலவுகளையும் சமாளிக்கமுடியாமல் கஷ்டப்படுவர். வாகன ஓட்டுநர்கள் விபத்துக்கள் பற்றி அவதானமாக இருக்கவும். குடும்பப் பெண்கள் வீட்டுக் கருமங்களை செவ்வனே செய்வதில் பல இடையூறுகளைச் சமாளிக்கவேண்டியிருக்கும். தேவையற்ற விடயத்தில் தலையிடுவதைத் தவிர்க்கவும். மறைமுக பகைவர்களைப் பற்றி கவனமெடுத்தல் வேண்டும். தேகசுகம் இடையிடையே பாதிக்கப்படலாம். உத்தியோகத்தர்கள் வெகுநிதானத்துடன் கருமாற்றவேண்டும். வியாபாரிகளுக்கு நட்டமே காட்டும். மாணவர்களுக்கு ஊக்கம் தேவை.

### கும்பம்

(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)

கும்பராசியில் ஜனனமானவர்கள் இந்தவாரம் பல நன்மையான பலன்களைக் காண்பர். குடும்பத்தவர்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். நல்ல வருவாயும் கிட்டும். நண்பர்கள், உறவினர்களால் உதவி உண்டு. தூரத்திலிருந்து நற்செய்திகள் வரும். இல்வாழ்க்கையில் இணைய விரும்புவோர் நற்பலன்களைக் காண்பர். உத்தியோகத்திலுள்ளவர்கள் உற்சாகத்துடன் கருமமாற்றி அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடந்து பணம் சேரும். புதிய முதலீடுகளை மேற்கொள்ளவும் நன்று. பெண்கள் குடும்பத்தில் மிக்க சுறுசுறுப்புடன் காணப்படுவர். மாணவர்கள் விளையாட்டுக்களில் கூடிய அக்கறை கொள்வர், பரீட்சைகளில் கூடிய புள்ளிகள் பெறுவர்.

### மீனம்

(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)

இந்த ராசியினர் பல வகையாலும் கஷ்டபலன்களே கூடுதலாகக் காண்பர். தொழில் புரிவோர் வியர்வை சிந்தி உழைத்தாலும், வருவாய் குறைவாகவே கிடைக்கும். செலவுகளோ முன்னரிலும் பார்க்க கூடுதலாகும். குடும்பத்தில் பிணக்குகளும் நிம்மதிக் குறைவும் தோன்றும். தேக சுகங்களும் பாதிப்படையும். கடன்தொல்லைகளைச் சமாளிக்கமுடியாமல் கஷ்டமடைவர். பொருளாதாரத்தில் பற்றாக்குறை இருந்துகொண்டே இருக்கும். இன பந்துக்கள், அயலவர்கள் தொல்லைகொடுப்பார்கள். திருமண நிகழ்வுகள் எட்டாப் பழமாக இருக்கும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு ஆளாக வேண்டியிருக்கும். பிரயாணத்தை மேற்கொள்ள விரும்புவோர் ஏமாற்றப்படுவார்கள். வியாபாரிகளுக்கு இலாபம் குறைவாகவே இருக்கும். மாணவர்கள் கல்வியில் ஊக்கம் செலுத்தமுடியால் இடையூறுகள் ஏற்படும்.

# தனியரசாகப் பிரிந்து ...

களிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. தனித் தமிழ் அரசுக்கு அத்திவாரமாக எமது திட்டம் அமைவதாகச் சிங்கள இனவாதக் கட்சிகளும் ஊடகங்களும் கண்டனக் குரல் எழுப்பி வருகின்றன. இந்திய ஊடக உலகத்திலிருந்தும் இந்திய அரசியல் ஆய்வாளர்களிடமிருந்தும் இதேபோன்று கண்டன விமர்சனங்களும் வந்து கொண்டிருக்கின்றன.

எதிர்க் கட்சிகளின் சார்பாகத் திரு.கதிர்காமர் விடுத்த நீண்ட அறிக்கையில் எமது திட்டவரைவைப் படுமோசமாக விமர்சித்து, தனியரசு உருவாக்கத்திற்கான அம்சங்கள் அதிற்பொதிந்து இருப்பதால் இலங்கையின் இறைமைக்குப் பேராபத்து ஏற்பட்டிருப்பதாக எச்சரித்தார்.

**ஆச்சரியத்தையும் ஏமாற்றத்தையும் அளித்த சந்திரிகாவின் நடவடிக்கை**

எமக்கு ஒரு புறம் ஆச்சரியத்தையும் மறுபுறம் ஏமாற்றத்தையும் கொடுத்த விடயம் என்னவென்றால் எமது இடைக்கால நிர்வாகத் திட்டவரைவு வெளியான சில தினங்களிலேயே சந்திரிகா அம்மையார் திடீரென ரணில் விக்கிரமசிங்காவின் ஆட்சியதிகாரத்தின் கீழிருந்த மூன்று முக்கிய அமைச்சுகளைப் பறித்தெடுத்தமையாகும்.

அவர் என்னதான் காரணங்களைக் கற்பித்தாலும் எமது திட்டவரைபின் உடனடி எதிர்வினையாகவே இந்தப் பாரதூரமான நடவடிக்கையை எடுத்தார் என்பது இன்று உலகறிந்த உண்மையாகிவிட்டது. சந்திரிகாவின் இத்திடீர்த் தலையீட்டினால் ரணிலின் ஆட்சிபீடம் அதிகாரமிழந்து முடங்கிக்கிடப்பது மட்டுமன்றி ச[illegible]ான வழிமுறைக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

எமது இயக்கம் முன்வைத்த இடைக்கால அதிகாரசபை, தமிழீழத் தனியரசை உருவாக்கும் நோக்கம் கொண்டதாகவும் தனியரசுக் கா[illegible]படிக்கற்களைக் கொண்டிருப்பதாகவும் முனவைக்கப்படும் குற்றச்சாட்டுகளில் எவ்வித உண்மையும் இல்லை.

நாம் தெரிவித்த யோசனைகள் எமது தேசியப் பிரச்சினையின் நிரந்தரத் தீர்வுக்கான இறுதித் திட்டமன்று. எமது திட்டவரைவு ஓர் இடைக்கால ஒழுங்கு பற்றியது. நாம் பரிந்துரைத்த நிர்வாகசபை கணிசமான தன்னாட்சி அதிகாரங்களைக் கொண்டதென்பது உண்மை.

**நிர்வாக அதிகாரம் இல்லாமல் அபிவிருத்தித் திட்டம் சாத்தியமல்ல**

உருப்படியான நிர்வாக அதிகாரங்கள் இல்லாமற் போரினாற் பாதிக்கப்பட்ட பல லட்சம்மக்களுக்கு மறுவாழ்வளிக்கும் பாரிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதும் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதும் சாத்தியமில்லை. அத்துடன் சட்டம்-ஒழுங்கு, நீதி நிர்வாகம், நிதி ஒதுக்கீடுகள், காணிப் பகிர்வுகள் போன்ற பிராந்திய நிர்வாகத்தையும் செம்மையாகச் செயற்படுத்த முடியாது.

இங்கு இன்னொரு முக்கிய விடயத் தைக் க[illegible]த்தில் எடுத்துக்கொள்வது அவசியம். அதாவது, வடகிழக்கிலுள்ள பெரும்பகுதி ஏற்கனவே எமது ஆட்சியதிகாரத்தின் கீழ் நேர்த்தியாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றது என்ற யதார்த்த உண்மையையும் நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

வடகிழக்கில் இன்று நிலவும் கொடூரமான யதார்த்தப் புறநிலைகள், தொடரும் இராணுவ ஆக்கிரமிப்பு, ஆயுதப் படைகளின் அனர்த்தங்கள், இயல்புநிலை தோன்றாத அவல நிலை, எமது மக்கள் எதிர்கொள்ளும் அவசர மனிதாபிமானத் தேவைகள் மற்றும் பல வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கும் நீதியான, நியாயமான, உடனடியான பரிகாரம்காணும் நோக்குடனேயே ஓர் உருப்படியான திட்டமாக எமது யோசனைகளை முன்வைத்தோம்.

**முற்போக்கான புதுமையான திட்டம்**

இத் திட்டத்தில் முற்போக்கான, புதுமையான, ஆக்கபூர்வமான அம்சங்கள் பலவுண்டு. வடகிழக்கில் பெரும்பான்மையினராக வாழும் தமிழரும் மற்றும் முஸ்லிம், சிங்கள மக்களும் தமிழீழ மண்ணில் தமது அரசியல், சமூக, பொருளாதார, கலாசார வாழ்வை மேம்படுத்தும் வகையில் தன்னாட்சி அதிகாரங்களைக் கொண்டதாக இத்திட்டம் அமைகிறது.

இந்தச் சுயாட்சிக்கான அம்சங்களை மிகைப்படுத்தி, அவற்றைத் தனியரசுக்கான திட்டமாகத் திரிபுபடுத்தி எமது சமாதான முயற்சிக்குக் களங்கம் ஏற்படுத்தச் சில சக்திகள் முனைவது எமக்குக் கவலையைத் தருகிறது. இந்த இடைக்கால அதிகாரசபைத் திட்டம் அரசாங்கத்தின் யோசனைகளுக்கு மாற்றீடாக, பேச்சுக்களுக்கு அடிப்படையாக முன்வைக்கப்பட்டதாகும்.

நேர்மையுடனும், சமாதான வழிமுறையில் உறுதியான பற்றுடனும் நாம் மேற்கொண்ட இம்முன்முயற்சி தென்னிலங்கையில் ஓர் அரசியற் புயலைக் கிளப்பியிருக்கிறது. சிங்கள இனவாத சக்திகள் எமக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்தியுள்ளன.

சிங்கள தேசத்தின் இரு பெரும் கட்சிகளுக்கும் அதன் தலைவர்களுக்கும் மத்தியில் எழுந்த அதிகாரப் போட்டியால் அரச கட்டமைப்பே ஆட்டம்கண்டு நிற்கிறது. காலங்காலமாகத் தமிழருக்கு உரிமையை மறுத்துவரும் சிங்கள இனவாதத்தின் முகமூடிகிழிந்து விட்டதால் அதன் உண்மையான, அசிங்கமான முகத்தை உலகம் காணக்கூடியதாக இருக்கிறது.

**முடிவில்லாத துன்பியல் நாடகமாக தொடரும் தமிழர் பிரச்சினை**

முடிவில்லாத ஒரு துன்பியல் நாடகமாகத் தமிழரின் இனப்பிரச்சினை தொடர்கிறது. எமது பிரச்சினைக்குத் தீர்வுகாண ஆளும்கட்சி முயற்சிப்பதும் எதிர்க்கட்சி எதிர்ப்பதும் பின்பு எதிர்க்கட்சி ஆளும் கட்சியாக மாறி மீண்டும் அதே முயற்சியும் அதே எதிர்ப்புமாக இந்தச் சிங்கள அரசியல் வரலாற்று நாடகம் தொடர்ச்சியாக ஒரே பாணியிற் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக மேடையேறி வருகிறது.

இலங்கையில் மாறிமாறி ஆட்சிபீடம் ஏறும் இரு பெரும் சிங்கள அரசியற் கட்சிகளுமே தமிழர்களுக்கு விரோதமான இந்த விபரீத நாடகத்தின் இயக்குனர்கள். இந்த இனவாத நாடகத்தின் கதாநாயகர்கள் காலத்திற்குக்காலம் மாறியபோதும் கதையின் கருப்பொருள் மாறவேயில்லை. தற்போது கொழும்பில் உருவாகியிருக்கும் அரசியல் நெருக்கடியும் இந்த அபத்த நாடகத்தின் அப்பட்டமான வெளிப்பாடுதான்.

தமிழர்களைப் பகடைக் காய்களாகப் பாவித்து ஆடப்படும் இந்த சதுரங்க விளையாட்டின் எதிர்விளைவாக எத்தனையோ சமரச முயற்சிகள் பாழடிக்கப்பட்டன. எத்தனையோ



பேச்சுவார்த்தைகள் முறிந்துபோயின. எத்தனையோ உடன்பாடுகள் கிழித்தெறியப்பட்டன. எத்தனையோ ஒப்பந்தங்கள் செயலிழந்து செத்துப்போயின. இதனால் தமிழரின் பிரச்சினை தீர்வின்றித் தொடர்கிறது. காலத்தால் மோசமாகித் தமிழரின் அவல வாழ்க்கை தொடர்கிறது.

**பேரினவாத சிலந்தி வலைக்குள் சிக்கிய தமிழர் வாழ்வு**

சிங்களப் பேரினவாதத்தின் சிலந்தி வலைக்குட் சிக்கித் தமிழரின் வாழ்வும் வளமும் சிதைந்து போவதை நாம் இனியும் அனுமதிக்கமுடியாது. வன்முறையைத் துறந்து, மென்முறைப் பாதையைத் தழுவி சமரசத்திற்கும் சமாதான முன்னெடுப்புகளுக்கும் எம்மால் முடிந்தளவு நாம் முயற்சித்து வருகின்றோம். இதனை உலக நாடுகளனைத்தும் நன்கறியும். ஆனால், சிங்கள இனவாத ஆளும் வர்க்கம் தொடர்ந்தும் எமது மக்களின் உரிமைகளை மறுத்து, சமரசத் தீர்வுகளை எதிர்த்து, ஒடுக்குமுறையைத் தொடருமானால் எமது மக்களுக்கு உரித்தான சுயநிர்ணய உரிமையின் கீழ் நாம் பிரிந்துசென்று தனியரசைக் கட்டி எழுப்புவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.

**இறுதி மார்க்கத்துக்கு தமிழர்களை தள்ளிவிடவேண்டாம்**

இப்படியான இறுதி மார்க்கத்திற்குத் தமிழர்களைத் தள்ளிவிடும் புறநிலையை உருவாக்கிவிடவேண்டாமென நாம் சிங்கள அரசியல் தலைமைகளுக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

ஒடுக்குமுறையின் கொடுமைகளுக்கு ஆளாகி, இலட்சியத்தால் ஒன்றுபட்ட மக்களைஎந்தவொரு சக்தியாலும் அசைத்துவிட முடியாது. இந்த உண்மையை இன்றைய புனிதநாளில், தமிழீழத்திலும் உலகெங்கும் எமது தியாகிகளை நினைவுகூரும் இந் நன்நாளில்,எமது இதயங்களிற் பதித்து, விடுதலை என்ற எமது சத்திய இலட்சியத்தில் நாம் உறுதிகொள்வோமாக.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்












கோப்பாய், கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லங்களில் நேற்று நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுக் காட்சிகள்.



# ஓராண்டு நினைவலைகள்

மலர்வு 01 - 01 - 1916



உதிர்வு 28 - 11 - 2002

## பஸ்ரியாம்பிள்ளை கிறிஸ்தோப்பர் (இரத்தினம்)

எரிதிரியானாய் - தினமும் எமக்காய்... உன்வாழ்வை உருக்கினாய்
காலத்தின் பதிவுகளில் மட்டுமல்ல - எம்
மனங்களின் நினைவுகளிலும் உம் முகம் ஒளிர்கின்றது.
கண்டிப்பான வாழ்வு ஆனால் கனிவு தரும், இதயம் படைத்த தந்தையே
நீங்கா உங்கள் நினைவுகளுடன், நெஞ்சுருகி நிற்கின்றோம்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 28.11.2003 அன்று காலை 6.30 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்திலும், மாலை 5.00 மணிக்கு கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்திலும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

கரவெட்டி மேற்கு, கரவெட்டி
மனித முன்னேற்ற நிலையம்,
யாழ்ப்பாணம். (534)

மக்கள். மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

நிறைஞ்சனாஸ் சங்கானை
சிவாஜி, அர்ஜீன் நடித்த
மன்னவரு சின்னவரு
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
Get Carder

ராஜா யாழ்ப்பாணம்.
லக்கிஸ்ரார் அஜித்,
மீராஜஸ்மின், கபாலீ நடித்த
ஆஞ்சநேயா
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-1751)

யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்!

## சென்னையில் கிறிஸ் பற்றன் நம்பிக்கை

விடுதலைப்புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான சமாதான முயற்சிகள் தொடர்ந்து நடைபெறுமென்ற நம்பிக்கை தமக்கிருப்பதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரங்களுக்கான ஆணையாளர் கிறிஸ் பற்றன் சென்னையில் தெரிவித்துள்ளார்.

இருநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த, கிறிஸ் பற்றன் ஜனாதிபதி, பிரதமர், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பின் போது, தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடிகளையும், அதனால் சமாதான முயற்சிகள் பாதிப்படைந்துள்ளமை குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இவர்களுடனான சந்திப்பை முடித்துக்கொண்டு சென்னை சென்றிருந்த பெட்டன், விமான நிலையத்தில் வைத்து ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றும்போது, அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் - இலங்கையில் உள்ள முக்கியமான அரசியல்வாதிகள் அனைவரும் பேச்சுவார்த்தைகள் நடைபெறவேணடும் என்று உறுதியாக இருக்கின்றனர்.

விடுதலைப்புலிகள் வன்முறையைக் கைவிடவேண்டுமென்று உலகம் எதிர்பார்ப்பதாகவும், பிரிவினையின் அடிப்படையில் அன்றி, சமஷ்டி அரசு என்ற அடிப்படையில் தீர்வு காணவேண்டும் என்று, எதிர்பார்ப்பதாக அவர்களிடம் எடுத்துக்கூறினேன்.

விடுதலைப்புலிகளுடன் நடத்திய ஒன்றேகால் மணிநேரப் பேச்சுக்களில் ஆறுமுறை விடுதலைப்புலிகள் இயக்கம் அமைதிப்பேச்சுக்களில் உறுதியாக இருப்பதாக பிரபாகரன் திரும்பத் திரும்பத் தன்னிடம் கூறியதாகவும் தெரிவித்தார்.

# அரசியல் நெருக்கடிக்கு உடன் தீர்வு எட்டப்படாவிடின் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பது கடினம்!

## அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடிக்கு உடனடியாக தீர்வு காணப்படாவிட்டால் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது கடினமாகும்.

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார். ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் அரசுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலைக்கு உடன்பாடு ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருதரப்புக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படாத வகையில், இனிவரும் நாடாளுமன்ற தொடர்களில் வாய்மூல கேள்வி கேட்பதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பொறுப்பேற்றிருக்கும் மூன்று அமைச்சுக்கள் தொடர்பாக அடுத்தமாதம் 17 ஆம் திகதி வரை எவ்வித வாக்கெடுப்புக்களும் இடம் பெறமாட்டாது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இரு தரப்புக்கும் இடையில் ஒருமைப்பாட்டின் மூலம் எட்டப்படும் ஜனாதிபதியும் பிரதமரும் அடுத்த வார இறுதியில் சந்தித்து அரசியல் நெருக்கடிகள் குறித்து பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என அரசாங்கம் நம்புவதாக பீரிஸ் தெரிவித்தார்.

நாட்டில் மீண்டும் தேர்தலை நடத்தாது, தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு அமைதியான வழியில் தீர்வுகாண்பதே மனோதித்த வெல குழுவினரின் அடிப்படை நோக்கமாகும்.

அரசாங்கத்தையும், எதிர்க்கட்சியையும் ஒருங்கிணைத்த செயற்திட்டம் ஒன்றில் ஈடுபடுவதுடன், சமாதான முயற்சி மற்றும் பொருளாதார அபிவிருத்தி குறித்தும் இந்தக் குழு கவனம் செலுத்தும்.

தேர்தல் ஒன்றை நடத்தவேண்டுமென்று அரசாங்கமும், எதிர்க் கட்சிகளும் விரும்பவில்லை. தேர்தல் ஒன்று நடைபெறுமானால் 600 முதல் 800 மில்லியன் ரூபா வரை செலவாகும்.

இதனால் தேசியப் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதானப் பேச்சுக்களும் பின்னதள்ளப்படும். இதனால் நாட்டுக்கு எந்தவித நன்மையும் கிடைக்கப்போவதில்லை.

ஜனாதிபதியும் - பிரதமரும் அடுத்த வாரம் சந்திப்பொன்றை மேற்கொள்ளவுள்ளனர். இதன்போது சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பது குறித்து இருதரப்பினருக்கும் இடையில் பேச்சுக்கள் நடை பெறும்போது அதிகளவு கவனம் செலுத்தப்படும் என பீரிஸ் தெரிவித்தார். (01)

## நாற்சந்தி

மழை தொடர்ச்சியாக சிணுங்கிக் கொண்டேயிருந்தது.

நாற்சந்தி அமைதித் தவத்தில் இருந்தது.

தூரத்தே துயிலுமில்லப் பாடல் ஒலித்து ஆத்மாவின் உணர்வுகளை ஈர்த்துக் கொண்டிருந்தது.

சந்திக்கு சற்று எட்டத்தில் பிரதான வீதியை ஒட்டியிருந்த ஒழுங்கையில் உள்ள வீடுகளில் மழைத் தூறலுக்கு இடையிலும் மாவீரர் நினைவுச் சுடர்கள் ஒளி சிந்திக் கொண்டிருந்தன.

கனகர் வீட்டு வாசலில் எரியும் சுடர் அணையாது ஒளிர குடைபிடித்தபடி கோணமலையார் நின்றிருந்தார். பக்கத்து வீட்டிலும் அதேநிலையில் நின்ற பரமர் கேட்டார். 'எப்படி கோணமலை தலைவற்றை பேச்சு...'

'கனபேற்ரை மூச்சை நிற்கப்பண்ணியிருக்கும்...'

'நல்லாச் சொன்னாய்... கன்னாபின்னாவென்று அலம்பிக் கொண்டிருந்த சந்திரிகா அம்மையாருக்கு சரியான அடி... கொடுத்திருக்கிறார்...'

'சமாதானத்துக்கு தயார் என்று சொல்லிக்கொண்டே அதைக் குழப்ப சதியும் செய்யும் தந்திரியெல்லே சந்திரிகா...'

நாளைக்கு விடிஞ்சாத் தெரியும் ஆளுக்காள் ஆயிரம் கதை கதைப்பினம்... தலைவற்றை பேச்சிலை அதைச் சொல்லேல்லை, இதைச் சொல்லேல்லை என்று அறிக்கைகளும் விடுவினம்...'

'ஆர் உவையின்ரை கதையைக் கேட்கப்போகினம்...'

அலம்பல் அறிக்கையைப் படிக்கப்போகினம்... மாரித் தவக்கைகளைப் போல் கத்திப்போட்டுக் கிடக்கட்டும்.

'நல்லாச் சொன்னாய்... மென்மையாய்த் தொடங்கி இறுக்கமாய்த் தொடர்ந்து நறுக்கென விளக்கி படக்கென அஞ்சாறு குட்டுமெல்லே போட்டிருக்கிறார்... தலைவர்...

'ஓமோம்... என்னத்தைச் சொல்லியென்ன... எதுவும் ஏறினாத் தானே...!'

'சமாதானத்திற்கு தலைவர் அகலமாத்தான் கதவைத் திறந்து விட்டிருக்கிறார்... அதை விட்டுட்டு பின் கதவால் நுழையத் திட்டமிட்டால் என்ன நடக்கும் எண்டுமெல்லே சொல்லியிருக்கிறார்...' என்றார் பரமர்.

'என்ன நடக்குமாம்...? என்றார் கோணமலை.

'போய் இன்னொருக்கா பேச்சை வடிவா கெசற்றில போட்டுக் கேட்டுப்பார். கடைசியிலை நல்லா விளங்குமென்றார் பரமர்.

-தெருவாசி



பிரதான சுடரை ஏற்றிவைத்து அஞ்சலி செலுத்தும் தலைவர் பிரபாகரன் மற்றும் போராளிகள்.

## கொட்டும் மழைக்கு...

முன்னதாக மாவீரர்களின் பெற்றோர்கள், உரித்துடையோர் பாண்ட் வாத்திய இசையுடன் துயிலும் இல்லங்களின் வாயிலில் இருந்து பொதுச்சுடர் ஏற்றப்படும் பிரதான இடத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டனர்.

அதன்பின்னர் - தேசியத் தலைவரின் உரையினை அடுத்து மணியொலி எழுப்பப்பட்டது. பின்னர் அகவணக்கம் இடம்பெற்றதையடுத்து பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. அதற்குப் பின், மாவீரர்களுக்கான சுடர்கள் அவர்களது பெற்றோர், உரித்துடையோரால் ஏற்றிவைக்கப்பட்டது.

கோப்பாய் துயிலும் இல்லத்தில், ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு ஒன்றுகூடி இருந்தனர். கொட்டும் மழையினையும் பொருட்படுத்தாது மாவீரர்களின் அஞ்சலி நிகழ்வில் மக்கள் கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் இலட்சக்கணக்கான மக்கள் அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டனர். பிரதான வீதியிலிருந்த பெரிய பாலங்கள் உடைந்து மழை நீர் வீதியைக் குறுக்கறுத்து ஓடியபோதும் மக்கள் துயிலும் இல்லங்களுக்குச் சென்று மாவீரர் நாள் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## பிரதானசுடரை ஏற்றிவைத்து...

லத்தில் - கடற்புலிகளின் துணைத் தளபதி செழியன், தீவகம் சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் - தீவக சிறப்புப் பொறுப்பாளர் கண்ணன் ஆகியோர் மாவீரர்களுக்கான பொதுச் சுடரினை ஏற்றிவைத்தனர். கிளிநொச்சி கனபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் - வடபோர்முனை கட்டளைத் தளபதி கேணல் தீபன், விசுமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் - தளபதி லக்ஷ்மன், மன்னார் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் - மேற்குக் கட்டளைத் தளபதி கேணல் ஜெயம், பெரிய பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் நிதித்துறை பொறுப்பாளர் யோ.தமிழ்க்குமரன், மன்னார் நகரப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில், அரசியற்துறையைச் சேர்ந்த ஸ்ரீபன் ஆகியோர் மாவீரர்களுக்கான பொதுச் சுடரினை ஏற்றிவைத்தனர்.

புதுக்குடியிருப்பிலுள்ள மாவீரர் நினைவு மண்டபத்தில் - இம்ரான்-பாண்டியன் படையணியின் சிறப்புத் தளபதி மணியரசன், முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் - சோதியா படையணித்தளபதி மதுரம், துணுக்காய் ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் - மாலதி படையணியின் சிறப்புத்தளபதி கேணல விதுஷா, வன்னி விளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில்-குட்டிசிறி மோட்டார் படையணித் தளபதி கேணல் பானு, அலம்பில் மாவீரர் துயிலும் இல்லத்தில் - கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான ஜெரோமி ஆகியோரும், சோதியா படையணியின் பாசறையில் அமைக்கப்பட்ட மாவீரர் மண்டபத்தில் அந்தப் படையணியில் இருந்து வீரச்சாவடைந்த 457 மாவீரர்களுக்கான திருவுருவப்படத்திற்கான பொதுச் சுடரினை சோதியா படையணித்தளபதி கேணல் தூர்க்காவும் ஏற்றிவைத்தனர்.

இதேவேளை - முல்லைத்தீவு கடலில், கடலில் காவியமான மாவீரர்களுக்கு கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை பிரதான சுடரினை ஏற்றினார்.

மணலாறு சிலோன் தியேட்டர் முன்னரங்கப் பகுதியில், போராளிகளாலும், தமிழீழ காவல்துறையின் சிறப்புப் படையணியினராலும் ஒழுங்கமைக்கப்பட்ட மாவீரர் நினைவு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில், தமிழீழ காவல்துறையினரின் சிறப்புப் படையின் பொறுப்பாளர் தமிழ்வன், மணலாறு மாவீரர் கல்லறைகள் உள்ள முக்கிய இடங்களில் தளபதிகள் கேணல் சொர்ணம், கேணல் பால்ராஜ், கேணல் ஆதவன் ஆகியோரும் முதன்மைச் சுடரினை ஏற்றிவைத்தனர்.

வவுனியாவில் அமைந்துள்ள ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில், தமிழீழ அரசியற்துறை மகளிர் அமைப்பின் பொறுப்பாளர் தமிழினி பிரதான சுடரினை ஏற்றினார்.

இதேவேளை - கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற மாவீரர் நிகழ்வுகளில், மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் மூத்த தளபதி கேணல் கருணா, மாவடி முன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தில் - தளபதி பவான், தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தில் - மட்டு. அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், வாகரை கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தில், தளபதி ராபர்ட், அம்பாறை கஞ்சிக்குடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் தளபதி லெப். கேணல் ராம் ஆகியோர் பிரதான சுடர்களை ஏற்றினர்.

திருகோணமலை ஆலங்குளத்தில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன் பிரதான சுடரினை ஏற்றினார்.

## படையினர்...

உறவினர்கள் அடையாளம் காட்டினர்.

இதேவேளை, பயிற்சியின்போது பத்துப் படையினர் மரணமான சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்றில் இரு சிப்பாய்களின் வாக்குமூலங்கள் நேற்றுப் பதிவுசெய்யப்பட்டன. மூன்று பிரிவுகளாக படையினர் பயிற்சியில் ஈடுபட்டிருந்ததாகவும், மூன்றாவது பிரிவு நீர்ப்பரப்பைக் கடக்கும் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகவும் மேற்படி சிப்பாய்களால் தெரிவிக்கப்பட்டது.


நீங்கள் விண்ணப்பித்து விட்டீர்களா?

IIS IIS IIS IIS IIS IIS IIS IIS




கணனிக் கல்விக்கான புலமைப் பரிசில்திட்டம் -2004

விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பமுடிவு திகதி : 30/11/2003 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

டிசம்பரில் O/L பரீட்சையும் ஏப்ரலில் A/L பரீட்சையும் எடுக்கவிருக்கும் மாணவர்களே!

உங்கள் பரீட்சை முடிவுகள் வெளிவரும் வரையுள்ள காலத்தைப் பயனுள்ள தாக்குவதற்கு, IIS இன் புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் கணனி உலகில் இணைந்து கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:
IIS, 100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.



எடிசன் அக்கடமி

தலைமை அலுவலகம்
411, கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.

கிளை அலுவலகம்
18, வைமன் றோட்,
நல்லூர்.

புதிய கல்வியாண்டு - 2004

தரம் 6 முதல் O/L வரை

ஆரம்பம்: 29.11.2003 சனிக்கிழமை

யாழ்ப்பாணம் எடிசன் → காலை 7.45
நல்லூர் எடிசன் → மதியம் 12.00

GRADE 6, 7 ENGLISH MEDIUM
வகுப்புக்களும் ஆரம்பமாகிறது.

(533)


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.